# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 11 வெள்ளிக்கிழமை (24-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:102


# பேச்சு ஆரம்பிக்கப்பட்டதும் படைகள் முகாம்களுக்குள் முடங்கவேண்டும்

## கண்காணிக்கக் குழு அவசியம் என்கிறார் அன்ரன் பாலசிங்கம்

லண்டன்,மார்ச்24

**★ போர் நிறுத்தம் செய்து பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயார். பேச்சுக்கள் ஆரம்பித்ததும் வடக்கு - கிழக்கில் நிலை கொண்டிருக்கும் படைகள் முகாம்களுக்குள் முடக்கப்படவேண்டும்.**

**★ போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க குழு அமைக்கப்பட வேண்டும்.**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

லண்டனில் இருந்த வெளியாகும் பிரபல ஆங்கில ஏடான 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

நோர்வேயின் தலைநகரமான ஒஸ்லோவில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை பெற்று ஐரோப்பிய தலைநகர் ஒன்றில் ஓய்வெடுத்து குணமடைந்து வரும் அன்ரன் பாலசிங்கம், இலங்கையிலிருந்து லண்டன் வந்த பின் பத்திரிகைக்கு அளித்துள்ள முதலாவது பேட்டி இது ஆகும்.

பேட்டியில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

பல்வேறு தடைகளாகவும் கட்டுப்பாடுகளாகவும் திணிக்கப்பட்டிருக்கும் சமூக பொருளாதார ஒடுக்குமுறையை சந்திரிகா அரசு அகற்றிவிட்டால் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசும் சந்திரிகாவின் அரசும் கடந்த பத்து வருட காலமாக எமது மக்கள் மீது திணித்து வந்துள்ள தடைகளும் கட்டுப்பாடுகளும் பாரிய இருப்புப் பிரச்சினைகளை ஏற்படுத்தியதோடு தமிழர்களது சமூகப் பொருளாதார, கலாசார வாழ்வையும் ஆழமாக சீர்குலைத்திருக்கின்றது. அத்துடன் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் கட்டவிழ்த்து விடப்பட்ட போர் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையை மேலும் மோசமாக்கி பத்து லட்சம் தமிழர்களை அவர்களது சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக்கி உள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)



அன்ரன்

## நோர்வேயின் புதிய அமைச்சரை பாலசிங்கம் விரைவில் சந்திப்பார்

லண்டன்,மார்ச்24

நோர்வேயில் பதவி ஏற்றுள்ள புதிய அரசின் வெளிவிவகார அமைச்சரை விரைவில் சந்திக்கவிருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசு பதவியேற்ற போதும் அதன் மத்தியஸ்த நிலைப்பாட்டிலும் கொள்கையிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்று தமக்கு உறுதி கூறப்பட்டுள்ளது என்று சொன்னார். (இ-3)



யாழ். வந்துள்ள ஆஸ்திரேலிய பிரதித் தூதுவர் காதி குலுக்மன் நேற்றுப் பிற்பகல் யாழ். ஆயர் அதி.வண தோமஸ் சௌந்தரநாயகத்துடன் கலந்துரையாடிய சமயம் எடுக்கப்பட்ட படம். படம்: பொ.இராஜேஸ்வரன்.

## தொண்டராசிரியர் உண்ணாவிரதம்

திருகோணமலை,மார்ச்24

திருகோணமலை மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்பாக சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்தனர்.

நேற்றுக்காலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்களைச் சந்தித்த மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் சரியான பதிலை வழங்கவில்லை என்றும் -

இதனால் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் - அவர்கள் தெரிவித்தனர்.

தமது நியமனம் தொடர்பாக கல்வி, உயர்கல்வி அமைச்சரிடம் இருந்து உறுதியான பதில் கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்று அவர்கள் மேலும் கூறினர். (இ-3-7-150-145)

## நகரில் நாளை சமாதானப் பேரணி

யாழ்ப்பாணம்,மார்ச்24

யுத்தத்தை உடன் நிறுத்தி தமிழ்மக்களுக்க நீதியான நியாயமான தீர்வை வழங்க வேண்டுமெனக்கோரி நாளை சனிக்கிழமை யாழ்.நகரில் சமாதானப் பேரணி பெரிய அளவில் நடைபெறவுள்ளது.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பேரணியில் உள்ளூர் அமைப்புக்கள் மற்றும் மத நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொள்வர்.

நாளை காலை 9.15' மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில். இருந்து ஆரம்பிக்கும் இந்தப் பேரணி கோயில் வீதி ஊடாக பிரதான வீதியை அடைந்து பின்னர் அங்கிருந்து திரும்பி துரையப்பா விளையாட்டரங்கில் சென்றடையும்.

தொடர்ந்து அங்கு பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை நிலை நாட்ட வேண்டியதன் அவசியம் குறித்து பலரும் இங்கு உரையாற்றுவர். சமாதானத்தை வற்புறுத்தி அரசாங்கத்துக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் வழங்கப்படவிருக்கும் மகஜர்கள் வாசித்துகாட்டப்படும்.

பேரணியில் கலந்து கொள்வோருக்கென போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன், பேரணி செல்லும் பாதையில் மக்கள் நலன்புரி சங்கத்தின் முதலுதவிப் படையினர் மற்றும் தொண்டர்கள் சேவையில் ஈடுபடுவர். இதற்காக மேற்படி தொண்டர்களை நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் காலை 8 மணிக்கு ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதே வேளை யாழ். நகரில் நடைபெறவுள்ள பேரணிக்கு ஆதரவு தெரிவித்து நாளை காலை 9 மணிக்கு கொழும்பு - மொறட்டுவ சர்வோதய நிலையத்திலும், கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிலும் தியான நிகழ்வு இடம் பெறுவுள்ளது.

சர்வதோய இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறுவுள்ள இந்த நிகழ்வில் கொழும்பில் வசிக்கும் சமாதான விரும்பிகள் பலரும் பங்கு பற்றுவர் எனக் கூறப்பட்டது. (இ-7-5)

## அரியாலைப் பகுதியில் நேற்று சிப்பாய், பொதுமகன் பலி!

யாழ்ப்பாணம்,மார்ச்24

அரியாலை மாம்பழச்சந்திக்கு சமீபமாக நேற்று மாலை 6மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார். பொதுமகன் ஒருவரும் அதில் சிக்கி உயிரிழந்தார்.

அரியாலையைச் சேர்ந்த கோபாலசிங்கம் கணேஷா (வயது 25) என்பவரே உயிரிழந்தவராவர்.

ரியூசனுக்கு சென்று திரும்பிய மாணவரைப் பயன்படுத்தி சைக்கிளில் சென்ற சிப்பாய் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும்-

பிஸ்ரலால் ஏழு சுற்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும் -

மாணவர் சென்றதால் படையினர் பதில் தாக்குதல் நடத்தவில்லை என்றும் - படைத்தரப்பு கூறியது. (இ-3-4)

## நாவற்குழி சந்திப் பகுதியில் ஷெல் வீச்சில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

நாவற்குழி சந்திப் பகுதியில் நேற்று மாலை வீழ்ந்து வெடித்த ஷெல்லால் ஒருவர் காயமடைந்தார்.

நாவற்குழியைச் சேர்ந்த ஐயன் கந்தசாமி (வயது 45) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனங்களப்பு, அறுகுவெளிப்பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகக் கூறப்பட்டது. (இ-3-4)

## தொடர் ஷெல் தாக்குதல்களினால் தனங்கிளப்பில் 6 படையினர் காயம்

கொழும்பு,மார்ச்24

தனங்கிளப்பு பகுதியில் நிலை கொண்டுள்ள படையினரின் முன்னரங்க பாதுகாப்பு நிலைகள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தொடர் ஷெல் தாக்குதலில் ஆறு படையினர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

படையினரும் பதில் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3-4-7)

## அறுகுவெளியில் துப்பாக்கிச்சூடு!

சாவகச்சேரி,மார்ச்24

தனங்களப்பு, அறுகுவெளிப் பகுதியில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் அப்பகுதியில் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த புத்தூர், வாதரவத்தையைச் சேர்ந்த பூதன் ஆனந்தன் என்ற தொழிலாளி தலையில் பலமான சூட்டுக்காயத்துக்கு இலக்காகி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-31)

## உதயனில் நயப்பு வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

உதயன் பத்திரிகையின் ஆசிரிய பீட அங்கத்தவர்களுக்கு நடத்தப்படும் நயப்பு வைபவம் இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் நடைபெறுகிறது.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் 99 ஆம் ஆண்டுக்கான துணிச்சலான பத்திரிகை விருது உதயன் பத்திரிகைக்கு வழங்கப்பட்டதை யொட்டி இந்த நயப்பு வைபவம் நடத்தப்படுகிறது.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லின்டா ஜோய் டபீல்ட் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு உதயன் ஆசிரிய பீட அங்கத்தவர்களுக்கு பதக்கங்களைச் சூட்டுவார். (இ)

## கூடைப்பந்தாட்ட ஆடுகளம் யாழ். இந்துவில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ். இந்துக்கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தை இன்று காலை 9.45 மணியளவில் பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லின்டா ஜோய் டபீல்ட் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பார்.

கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் தூதர் யாழ்.விஜயத்தை நினைவுகூர்ந்து மரக்கன்று ஒன்றையும் அங்கு நடுவார்.

ஆடுகளத்தில் முதலாவது ஆட்டம் இன்று மாலை 4 மணிக்கு கல்லூரி அ.சிறிக்குமரன் தலைமையில் நடைபெறும்.

பழைய மாணவர் சங்கத் தலைவரும் அரச அதிபருமான க. சண்முகநாதன் இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்.

இந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியும் சென்ரலைட்ஸ் அணியும் மோதவிருக்கின்றன. (இ-3)

மிலேனியம் ஆண்டில் புதுயுகம்

# பூங்கன்றுகள் கண்காட்சியும் விற்பனையும்

## பூங்கனிச்சோலை
(POONGANI FARM)

மார்ச் 25 ஆம், 26ஆம் திகதிகளில் காலை 8 மணிமுதல் இரவு 8.30 மணி வரையும் நடைபெறும்

இயற்கை எழில் நிறைந்த பசுமையான
கண்ணைக் கவரும் காட்சிகளுடன்

- அலங்கார வளைவுகள்
- மலை அருவி
- புல்மேடைகள்
- வர்ணக்குடைகள்
- பூம்பந்தல்
- தண்ணீர்த்தொட்டி
- புற்றரைகள்
- வர்ண ஊஞ்சல்

- பல புதுமை நிறைந்த தண்ணீர் சிந்திகள்
- பலவர்ண மின்சார விளக்குகள்

**மற்றும் பலவர்ண றோஜா செடிகள், பலவர்ண அலங்கார செடிகள், கனிமரங்கள் மற்றும் பசுமையான காட்சிகளை கண்டுகளிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

எம்மிடம் பூங்கன்றுகள், கனிமரக்கன்றுகள், சாடிகள் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**பூங்கனிச்சோலை**

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி.
(நல்லூர் பின்வீதியில் இருந்து 1500 m தூரத்தில் உள்ளது)
★ தொலைபேசி இலக்கம் - 2976

குறிப்பு:- **வீடியோப் படப்பிடிப்பாளர்களுக்கு**
மார்ச் 25ஆம், 26ஆம் திகதி இரண்டு தினங்களும் மட்டும் வீடியோ மிக்சிங் எடுப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு தயவாக கேட்டுக் கொள்கிறோம். (C/11509)


# சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள கிறிஸ்துவுக்காக இளைஞர் என்ற ஸ்தாபானத்தினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட வேதப்பாடப் பரீட்சையில் பங்கு கொண்டு சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

யாழ். கச்சேரியடி வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் இந்த வைபவத்துக்குப் பரீட்சையில் பங்கு கொண்ட மாணவர்கள் மற்றும் பெற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**24-03-2000**



செல்வன்
## கபிலன் டினேஷ் சுதாகர்

ஏழாலை மத்தியைச் சேர்ந்த
**சுதாகர் - சோஜினி தம்பதிகளின**

செல்வப்புதல்வன **கபிலன் டினேஷ்** தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் உள்ள தமது இல்லத்தில் இன்று **(24-3-2000)** வெள்ளிக்கிழமை வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, சின்னம்மா, மச்சான்மார், மச்சாள்மார், அண்ணா, தம்பிமார், தொட்டப்பா, தொட்டம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கதிரைத்தாயின் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

லண்டன் (74692) **திரு. சுதாகர்**

ஓம்
# திருமண அழைப்பு

அன்புடையீர்!

*நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் பங்குனித் திங்கள் 12 ஆம் நாள்* **(25-03-2000)** *சனிக்கிழமை பகல் 10.49 மணி தொடக்கம் 11.07 மணி வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்*

திரு. திருமதி ஆனந்தராஜா தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**விமலராஜா**
B.A. Dip.-in-Ed.
(ஆசிரியர், அ.மி.க. உடுப்பிட்டி)
அவர்களுக்கும்

திரு. திருமதி மகாதேவன் (அமரர் தவமணிதேவி)
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**ரதினி**
(தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

*எல்லாம் வல்ல இறைவன் துணை கொண்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் திருமாங்கல்ய தாரண பாணிக்கிரகணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதன் பின் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.*

வரவேற்பு 26-03-2000 ஞாயிறு பிற்பகல் 4 மணியளவில்
மணமகன் இல்லத்தில் நடைபெறும்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி நா.ஆனந்தராஜா
தம்பதிகள்
சந்தை வீதி, உடுப்பிட்டி

திரு. சி. மகாதேவன்
திரு. திருமதி பாலச்சந்திரன் - தயாளினி தம்பதிகள்
643, (1191), கே. கே. எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். (74748)


பாடசாலை மாணவர்களின்
## கணிப்பீட்டு அறிக்கை

இந்த அறிக்கையை கணனியில் எழுத்துரு அமைத்து off Set இல் அச்சமைத்து வெளியிட உள்ளோம். தேவையான பாடசாலை அதிபர்கள் எங்களுடன் தொடர்புகொண்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

**பிள்ளையார் அச்சகம்**
Pillaiyar off set Printer

676, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
கரணவாய்,
கரவெட்டி.
(74741)


# 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
1925 - 03 - 14



மறைவு
2000 - 03 - 10

திருமதி
## தையல்நாயகி நவரத்தினம்

எமது குலவிளக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோதும், மறைந்த போதும் வந்து உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

புலவனார் வீதி,
கல்வியங்காடு.
(74740)


குளிர்மையின் மறுபெயர்!

# NIPPON

இலங்கையில் அதிகூடிய தெரிவு 80ற்கும் மேற்பட்ட மாதிரிகள்!

## மின்விசிறிகள்

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC

LANKA NIPPON
'தரத்தின் சின்னம்'

No.18,Keyzser Street, Colombo - 11
T.P:- 437735 Fax:-437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc., Colombo- 04 Tel: 589992.

# மலேரியாப் பிரதேசங்களில் ஒன்றாக யாழ். மாவட்டமும் பிரகடனம்

மூளாய், மார்ச் 24
மலேரியா நோயின் தாக்கத்துக்குட்பட்ட மாவட்டங்களில் ஒன்றாக யாழ். மாவட்டமும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்கனவே பல பகுதிகள் இவ்வாறு மலேரியா நோயின் தாக்கத்துக்குட்பட்ட பகுதிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வகையில் இவ்வாண்டு யாழ். மாவட்டத்தையும் மலேரியா நோயின் தாக்கத்துக்குட்பட்ட பகுதியாக உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனம் செய்துள்ளது.

மேற்படி பிரகடனம் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த நோயைக்கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பல்வேறு வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த உதவிப் பூச்சியியலாளர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இந்த நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் வலிகாமம் பகுதியில்கந்தரோடை, அளவெட்டி ஆகிய பகுதிகளிலும் வடமராட்சியில் கம்பர்மலை, குடவத்தை, யாக்கரை ஆகிய பகுதிகளிலும் தென்மராட்சியில் கொடிகாமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் மலேரியா நோயின் தாக்கம் அதிகமாக அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி பகுதிகளில் இந்த நோயைக்கட்டுப்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-99)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி, மார்ச் 24
சட்டவிரோதமாகக் கஞ்சா வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

கடந்த திங்களன்று தென்மராட்சிப் பிரதேச மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி றொகான் சஞ்ஜே ராஜுவினால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டவழக்கில்கொடிகாமத்தைச் சேர்ந்தசிவராசா சசிகுமார் என்பவருக்கே அபராதம் விதிக்கப்பட்டது.

மதுவரிப் பகுதியினரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பத்து வழக்குகளில் பதினொரு லீற்றர் கோடா வைத்திருந்த கைதடியைச் சேர்ந்த சின்னத்துரை சின்னத்தம்பி என்பவருக்கு 17 ஆயிரத்து 500 ரூபாவும் —

பத்தரை லீற்றர் கோடா வைத்திருந்த தச்சன்தோப்பைச் சேர்ந்த ஞானசோதி சோமசுந்தரம் என்பவருக்கு 12 ஆயிரத்து 500ரூபாவும் —

ஒரு லீற்றர் கசிப்பு வைத்திருந்த கொடிகாமத்தைச் சேர்ந்த சின்னப்பொடியன் தேவராசா என்பவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் —

அபராதமாக விதிக்கப்பட்டது.

இதேவேளை —

கசிப்பு பரலுடன் அநாதரவாகக் காணப்பட்ட பெண்களுக்கான சைக்கிள் ஒன்றும் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது.

தாக்கல் செய்யப்பட்ட பத்து வழக்குகளையும் விசாரித்த நீதிமன்ற நீதிவான் மொத்தமாக 53 ஆயிரத்து 200 ரூபா அபராதம் விதித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## வேலைப் பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 24
உலக வங்கியும் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியமும் இணைந்து ஏப்ரல் 3, 4 ஆம் திகதிகளில் தேசிய வேலைப் பட்டறை ஒன்றினை கொழும்பில் நடத்தவுள்ளன.

இந்த வேலைப்பட்டறையில் யாழ்ப்பாணத்திலிருந்து யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் பொ. விக்னேஸ்வரன் தலைமையில் மூவரடங்கிய குழு கலந்து கொள்ளவுள்ளது. (ஐ-5)

## திறப்பு விழா

நெடுந்தீவு, மார்ச் 24
நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயத்தில் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய மத்திய கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீஞான கணபதி செயற்பாட்டறையும் அதனோடு இணைந்த விவசாயபீடமும் சிறுவர் விளையாட்டுத் திடலும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

வித்தியாலய அதிபர் த. இலங்கைநாதன் தலைமையில் நடைபெறும் இந்தத் திறப்புவிழாவில் தீவக கல்விப் கல்விப் பணிப்பாளர் த. விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடங்களைத் திறந்து வைப்பார்.

வேலணைப்பிரதேச செயலர் செ. இரத்தினம், பிரதேசசபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் தீவக அபிவிருத்தி உதவிக்கல்விப்பணிப்பாளர் அ. ஸ்ரனிஸ்லாஸ், கோட்டக் கல்வி உதவிப்பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், உதவிக் கல்விப்பணிப்பாளர் வ. நிமலநாதன் ஆரம்ப உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. செல்வரத்தினம், வலயக்கணக்காளர் ஏ தேவஅருள்ராஜ் ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க-111)

## ஆஸ்பத்திரி 'எக்ஸ்-றே' பிரிவுக்கு மற்றொரு தொழில்நுட்பவியலாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ். போதனா வைத்தியசாலை 'எக்ஸ்—றே' பிரிவுக்கு புதிதாக ஓர் எக்ஸ்—றே தொழில்நுட்ப வியலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

'எக்ஸ்—றே' பயிற்சியினை முடித்துக் கொண்ட இவருக்கு முதல் நியமனம் யாழ். ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவர் நேற்று முன்தினம் முதல் தனது பணியினை யாழ். ஆஸ்பத்திரியில் ஆரம்பித்துள்ளார்.

இவருடன் தற்போது 4 பேர் 'எக்ஸ்—றே' பிரிவில் பணியாற்றுகின்றனர்.

முன்னர் 14 பேர் பணியாற்றிய இப் பிரிவில் தற்போது ஒரு நிரந்தர தொழில்நுட்பவியலாளரே ஓர் ஒப்பந்த அடிப்படையிலான தொழில்நுட்ப வியலாளருடன் செயற்பட்டு வருகிறார். கடந்த சில வருடங்களாக பல நெருக்கடிகளுக்கும் மத்தியில் இப் பிரிவு இயங்கி வந்தது.

கடந்த வருடம் இருவரும், இவ்வாண்டு ஒருவருமாக மூவர் நியமிக்கப்பட்டதை அடுத்து தற்போது நான்கு நிரந்தர தொழில் நுட்பவியலாளர்களும் ஓர் ஒப்பந்தஅடிப்படையிலான தொழில்நுட்ப வியலாளருமாக ஐவர் கடமையாற்றி வருகின்றனர். (ஐ-15-139)

## நிறுவன தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
ஐ. ஐ. எஸ் கணனிக் கல்வி நிலையத்தின் 4 ஆவது நிறுவன தினம் நாளை சனிக்கிழமை காலை 9.15 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரியின் 'யூபிலி' மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜசுந்தரமும் சிறப்பு விருந்தினராக ஆர். ஜே. விக்னராஜாவும் கலந்து கொள்வர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ-6)

## கோப்பாய்வாசியான பெண்ணுக்கு பயண அனுமதி மறுப்பு

### ஆணைக்குழுவிடம் புகார்

யாழ்ப்பாணம், மார்ச் 24
கோப்பாயைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவரையும் அவரது இரு பிள்ளைகளையும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே செல்லப் படையினர் அனுமதி மறுத்து வருவதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த குலேந்திரம் பிறேமாவதி என்பவர் ஜேர்மனியிலுள்ள தனது கணவரிடம் செல்வதற்காகப் பயண அனுமதிகோரிக் கடந்த வருடம் ஜூலை மாதம் அச்செழுவிலுள்ள சிவில் அலுவலகத்திற்கு விண்ணப்பம் செய்தார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்று காரணம் கூறப்பட்டு இவரது விண்ணப்பத்திற்குப் பயண அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மீண்டும் கடந்த டிசெம்பரில் இவர் பயணத்திற்கான அனுமதி கோரி விண்ணப்பித்தபோதும் அனுமதி மறுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட பெண் அச்செழு முகாமிற்கு நேரில் சென்று அங்கு போக்குவரத்துக்குப் பொறுப்பான அதிகாரியைச் சந்தித்துத் தனது நிலைமையை விளக்கினார்.

இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் குழுவின் அதிகாரி சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா பலாலியிலுள்ள மனித உரிமைகள் நிலையத்துக்கு இது குறித்துத் தகவல் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதனாலேயே பயண அனுமதி மறுக்கப்பட்டதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-9)

# செய்திக் கொத்து

## மருந்து வகைகள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 24
செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்கிளை நோயாளர் சேவைக்கப்பலில் யாழ். போதனா வைத்தியசாலையின் பாவனைக்கான முதற் காலாண்டுக்கான மருந்து வகைகளில் ஒருதொகுதி எடுத்துவரப்பட்டுள்ளது.

இம் மருந்து வகைகளில் நீண்டநாள்களாக தட்டுப்பாடு நிலவிய முக்கிய சில மருந்து வகைகளும் எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான ஒட்சிசன் சிலிண்டர்களில் சிறு தொகையும் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும், இவையும் வைத்தியசாலையின் பாவனைக்கு பற்றாக்குறையாகவே உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-15)

## மின்சாரம் வழங்கக் கோரிக்கை

வளலாய், மார்ச் 24
இடைக்காடு, வளலாய்ப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கக்கோரி இப்பகுதி மக்கள் மகஜர் ஒன்றை மின்சார சபைக்கு அனுப்பியுள்ளார்கள்.

கடந்தகால இராணுவ நடவடிக்கையால் இப்பகுதியில் உள்ள மின் இணைப்பு வயர்களும், மின்சாரத் தூண்களும் சேதமாக்கப்பட்டுள்ளன இவற்றைச் செப்பனிட்டு இப்பகுதிக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. (க-178)

## சீருடை வழங்க ஏற்பாடு

சங்கானை, மார்ச் 24
பண்டத்தரிப்பு, காலைப்படி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களுக்குச் சீருடை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மேற்படி முன்பள்ளி தொடர்பான கலந்துரையாடல் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் இ. தவசீலன் தலைமையில் நடைபெற்றபோது இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை — விளையாட்டு மைதானத்தைச் சிரமதானம் மூலம் செப்பனிடவும் விளையாட்டுப் போட்டியைத் தொடர்வதற்கான ஏற்பாடுகள் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

மானிப்பாய் சுகாதார உத்தியோகத்தர் பண்ணாகம் வடக்கு அ. மி. த. க. பாடசாலை அதிபர் க. இரட்ணேஸ்வரன், ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (க-39)

## சேவை நலன் பாராட்டு

கொழும்புத்துறை, மார்ச் 24
யாழ். பல்கலைக்கழக நூல் நிலையத்தில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக நூலக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இ. தெய்வேந்திரம்பிள்ளைக்கு நூல் நிலைய உத்தியோகத்தர்களால் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நூல் நிலைய மண்டபத்தில் நடத்தப்பட்டது. (க-30)

## மரணவிசாரணை அதிகாரி நியமிக்கப்படவில்லை

கொழும்புத்துறை, மார்ச் 24
மானிப்பாய்ப் பகுதிக்கு கடந்த பத்து வருடங்களாக நிரந்தரமான விசாரணை அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவில்லை.

இந்த நியமனம் தொடர்பாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கு இப் பகுதியில் உள்ள பல பொது அமைப்புகள் மகஜர்கள் அனுப்பியும் இதுவரை மரண விசாரணை அதிகாரி நியமிக்கப்படாததையிட்டு இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-30)

## அன்பளிப்பு

தென்மராட்சி, மார்ச் 24
கச்சாய் வினோபா சனசமூக நிலையத்தினர் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்வி பயிலும் இப் பகுதியைச் சேர்ந்த மாணவிக்கு 10 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (க-117)

## டாக்டர் இன்றிச் சேவை பாதிப்பு

நெடுந்தீவு, மார்ச் 24
வேலணை ஆயுள்வேத வைத்தியசாலையில்கடந்த இரண்டு மாதங்களாக வைத்திய அதிகாரிஇன்மையால் வைத்திய நிலையம் இயங்க முடியாமல் உள்ளது.

இங்குகடமையில் இருந்த வைத்திய அதிகாரி இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ். மாநகர சபை ஆயுள்வேத வைத்திய நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்,

இந்த வைத்திய நிலையத்திற்கு டாக்டரை நியமிக்கும்படி பிரதேச சபை கோரிக்கைவிடுத்த போதும் இதுவரை வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-111)

## வீதிப்புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

வளலாய், மார்ச் 24
இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த பத்தமேனி விமானநிலைய வீதிப்புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்புனரமைப்புக்கென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 10லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (க-178)

## விலை உயர்வு

வளலாய், மார்ச் 24
தற்போது உள்ளூர்ச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. வெங்காயச் செய்கையால் கடந்தமுறை ஏற்பட்ட நஷ்டம் காரணமாக விவசாயிகள் இம்முறை இச் செய்கையில் அதிக கவனம் செலுத்தவில்லை குறைந்த அளவிலான விவசாயிகளே உற்பத்தியில் ஈடுபட்டனர்.

இதனாலேயே சந்தைகளில் சின்ன வெங்காயம் கிலோ 10 ரூபாவாகவும், பெரியவெங்காயம் 25 ரூபாவாகவும் விற்பனைசெய்யப்பட்டுவருகின்றது. (க-178)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 05 — 01 — 1928



மறைவு: 23 — 02 — 2000

## அமரர் பண்டிதர் நல்லதம்பி கந்தையா
(ஓய்வுபெற்ற அதிபர்)

மாதம் ஒன்று மறைந்தது நீங்கவில்லை எம் துயரம்
பாசத்தின் உறைவிடமே எங்களை வழி நடத்திய
அன்புத் தெய்வமே!
உங்கள் உறவுகள் உள்ளம் கலங்கி நிற்கின்றன அப்பா
என்றென்றும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு
நீங்காது

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நாளை (25-03-2000) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சாந்திப் பிரார்த்தனையிலும் போசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாய் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி,**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

''தெய்வகம்'',
மீசாலை கிழக்கு, மீசாலை.
(74645)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்.



## அமரர் கந்தமுத்து நடராசா
(சிங்கர்—காரைநகர்)

மலர்வு 27-09-1931 உதிர்வு 23-02-2000

23-02-2000 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் கந்தமுத்து நடராசா (சிங்கர்) அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (24-03-2000) வெள்ளிக்கிழமை 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

**மனைவி, மருமகன்**
**மகள், பேரப்பிள்ளைகள்**

சுழிபுரம்,
பத்திரகாளி கோவிலடி.
(74510)

# சான்றிதழ் வழங்கல்

வடமராட்சி, மார்ச் 24

யாழ். மாநகர சபை சுகாதாரப்பகுதி பட்டினிக்கு எதிரான நிறுவனத்துடன் இணைந்து 'யுனிசெவ்' அனுசரணையுடன் நடத்திய வீட்டுத்தோட்டத்திட்ட உணவுப் பதனிடல் பயிற்சிக் கண்காட்சி, சான்றிதழ் வழங்கும் வைபவமும் விற்பனையும் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு வண்ணார்பண்ணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதாரப் பரிசோதகர் பு. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன், ஏ. சி. என். திட்ட முகாமையாளர் செலாற்றம் செலிசிக், 'யுனிசெவ்' திட்டமிடல் அதிகாரி பஷிர்ஏணி, டாக்டர் திருமதி செ. தெய்வேந்திரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

(ஜ-173)

# சமுர்த்தி நியமனம்

தென்மராட்சி, மார்ச் 24

தென்மராட்சிபிரதேசசெயலர் பிரிவில் பணிபுரியும் 22 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் கடந்த செவ்வாயன்று பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் வழங்கப்பட்டன.

நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவத்தில் பிரதேச செயலக ஆளணி அலுவலர் செ. முருகையா ஈ. பி. டி. பியின் தென்மராட்சி பொறுப்பாளர் சாள்ஸ் அலெக்ஸாண்டர் உட்படபலர் கலந்து கொண்டனர்.

22 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கான நிரந்தர நியமனங்கள் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டுள்ளன.

இதே பிரதேச செயலர் பிரிவுக்கு ஏற்கனவே 17 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு நவம்பர் மாதம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-117)

# வெளிவாரி பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் அலகினால் நடத்தப்படும் பொதுக் கலைமாணி, வணிகமாணி பகுதி இரண்டு ஆகியவற்றுக்கான பரீட்சைகள் அடுத்த மாத இறுதியில் இடம்பெறவுள்ளன.

குறிப்பிட்ட பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் 15ரூபா பணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா வளாகத்தில் பரீட்சை எழுத விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை அங்கு பெற்றுப் பூர்த்திசெய்து வளாகத்தில் சமர்ப்பிக்கலாம் என்றும் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை பிரதான பாடமாக சங்கீதம் அல்லது நடனத்துக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் மட்டுமே அப்பரீட்சைகளுக்குத் தோற்ற முடியும்.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் அடுத்த மாதம் 16 ஆம் திகதி வரை வெளிவாரிப் பரீட்சைகள் அலகினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(உ-10)


வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை
அபிவிருத்திக்குழுவின் ஆதரவில் வடமராட்சி
லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்படும்

# இலவச மருத்துவசிகிச்சை முகாம்

காலம்: 02-04-2000 ஞாயிறு மு.ப.9மணி
இடம்: அரசினர் வைத்தியசாலை,
வல்வெட்டித்துறை.

1. கண்பரிசோதனை
2. நீரிழிவு
3. இரத்த அழுத்தம்
4. வாய்ப்புற்று

மற்றும் நோய்கள் இலவசமாகப் பரிசோதிக்கப்படும். அனைவரையும் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் தம்மைப் பதிவு செய்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

வடமராட்சி லயன்ஸ் கழகம்.
(சி/11486)


# 2 ஆம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம்: 15 — 10 — 1924



மறைவு: 18 — 03 — 1998

## மாணிக்கன் சபாபதி

திதி:- 24 - 03 - 2000

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகள், பேரப்பிள்ளைகள்.**

கருணாநிதி சனசமூக நிலையம்,
வல்வெட்டி.
(74675)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 27 — 05 — 1928



மறைவு: 22 — 03 — 1999

## திருமதி பத்மாவதி அம்பலவாணர்
திதி: 25-03-2000

நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்
என்னும் வண்ணம் இனிதே வாழ்ந்தீர்
சகல செல்வமும் பெற்றவர் ஆதலின்
யாவரும் புகழும் பேறு பெற்றுள்ளீர்
அன்பினால் அறத்தினால் ஒன்றாய்
பண்பினால் ஒன்றாய் பாரிடை வாழ்ந்தீர்
குலத்தின் தெய்வம் நலத்தின் உறைவிடம்
குறையேதும் இன்றி நிறைவாழ்வு வாழ்ந்து
இறைபதம் எய்தும் பேறு பெற்றீரே!
மறையுமோ எம் நெஞ்சில் உம்நினைவு.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கணவர்: க. அம்பலவாணர்
பிள்ளைகள்: அ. பாரதி
அ. சரவணபவன்
சி. சந்திரிகா
சே. வசந்தமாலா
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

ஆாலி தெற்கு.
(74707)

# பயங்கரவாதத்தை ஒடுக்க இந்தியாவுக்கு பூரண உதவி

## அமெரிக்கா வழங்கும் என்கிறார் கிளின்ரன்

புதுடில்லி, மார்ச் 24

இந்தியாவில் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு அமெரிக்கா எல்லாவகையிலும் உதவி செய்யும் என்று அமெரிக்க அதிபர் கிளின்ரன் தெரிவித்தார்.

நான்கு நாள் விஜயமாக இந்தியா வந்துள்ள அதிபர் கிளின்ரன் இந்திய நாடாளுமன்றத்தில் புதனன்று உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அமெரிக்காவும் இந்தியாவும் பயங்கரவாதம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் ஆகியவற்றால் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதால் இவற்றை ஒடுக்குவதற்கு கூட்டு முயற்சி அவசியம்.

அதேசமயம்— அணு ஆயுதத் தடை ஒப்பந்தமான சி. ரி. பி. ரியில் இந்தியா விரைவில் கையெழுத்திட வேண்டும், இந்த விடயத்தில் முடிவெடுக்கும் உரிமை முழுக்கமுழுக்க இந்தியாவுக்கே உள்ளது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினை களைந்து தீர்த்துவைப்பதில் அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்த எப்பொழுதும் தயாராக உள்ளது. எனினும் இந்த முயற்சியில் அமெரிக்கா மத்தியஸ்தம் வகிக்க விரும்பவில்லை என்றும் கிளின்ரன் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

## கிளின்ரன் பாகிஸ்தான் செல்லக் கூடாது

புதுடில்லி, மார்ச் 24

அமெரிக்க அதிபர் கிளின்ரன் தனது இந்தியவிஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் வழியில் பாகிஸ்தானுக்குச் செல்லக் கூடாது என்று பாரதிய ஜனதாக்கட்சி கிளின்ரனிடம் கோர உள்ளது.

### உலக அரங்கில்

இந்தக்கோரிக்கைஅடங்கிய மகஜர் ஒன்றைத் தாம் கிளின்ரனிடம் கையளிக்கப் போவதாக பாரதிய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் மதன்லால் குரானாவும் டில்லியின் முன்னாள் முதல்வர் சாகித்சிங்கும் நேற்று புதுடில்லியில் தெரிவித்தனர்.

(ஐ-6-9)

## ஜம்மு படுகொலைச் சம்பவத்தை பாகிஸ்தானும் கண்டிக்கிறது

இஸ்லாமாபாத், மார்ச் 24

ஜம்மு — காஷ்மீரில் கடந்த செவ்வாயன்று 35 சீக்கியர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை பாகிஸ்தான் மிகக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான நீதியான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் அது கோரி உள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்துல் சர்தார் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதை பாகிஸ்தான் வன்மையாகக் கண்டிக்கும் அதேநேரம் அது குறித்து முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கோருகின்றது. ஏனெனில் இந்தச் சம்பவத்தை உலக அரங்கில் பாகிஸ்தானுக்கு எதிரான பொய்ப் பிரசாரத்துக்கு இந்தியா பயன்படுத்தும்.

விசாரணைகள் நடத்தப்பட்டால் மட்டுமே உண்மை நிலைவரம் தெரியவரும் என்றும் அப்துல் சர்தார் மேலும் தெரிவித்தார்.

அந்தப் படுகொலைச் சம்பவத்துக்கு பாகிஸ்தானே பொறுப்பு என்று இந்தியா குற்றம்சாட்டி உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-6-9)

## தனி நாட்டில் வாழும் உரிமை பலஸ்தீனியருக்கு உண்டு

### பாப்பரசர் தெரிவிப்பு

ஜெருசலேம், மார்ச் 24

தமக்கென ஒரு தனிநாட்டைக் கொண்டிருக்கும் உரிமை பலஸ்தீனியர்களுக்கு உள்ளது என்று இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ள பாப்பரசர் 2 ஆவது அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

தனது விஜயத்தின் ஒரு பகுதியாக பெத்லஹேமுக்குச் சென்ற பாப்பரசர் அங்கு பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் இதனைக் கூறினார்.

கடந்த சில தசாப்தங்களாக பலஸ்தீன மக்கள் பட்ட துன்பங்களை எவரும் மறந்துவிட முடியாது. உலகின் கண்முன் இன்னமும் அது மறையாமல் இருக்கின்றது. உலகில் உள்ள ஏனைய மக்களுக்கு சமமாகவும், சமாதானமாகவும் வாழும் உரிமை பலஸ்தீனியர்களுக்கு உண்டு — என்று பாப்பரசர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் பாப்பரசர் பெத்லஹேமில் தங்கி இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-9)

## அமெரிக்க அதிபர் கிளின்ரன் தாஜ்மஹாலைப் பார்வையிட்டார்

புதுடில்லி, மார்ச் 24

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலை அமெரிக்க அதிபர் கிளின்ரன் நேற்று முன்தினம் மாலை சென்று பார்வையிட்டார்.

தாஜ்மஹாலை நேரில் பார்வையிடும் இரண்டாவது அமெரிக்க அதிபர் கிளின்ரனாவார். இதற்கு முன்னர் 1959 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க அதிபர் தாஜ்மஹாலை நேரில் பார்வையிட்டுள்ளார்.

கிளின்ரனுடன் அவரது மகள் மற்றும் மாமியார் ஆகியோர் சுமார் ஒரு மணி நேரமாக தாஜ்மஹாலைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

''என் சிறுவயது முதலே தாஜ்மஹாலைப் பார்க்க நான் ஆசைப்பட்டேன் அது இன்றுதான் நிறைவேறியது. இன்று நான் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்'' என்று தாஜ்மஹாலைப் பார்வையிட்ட பின்னர் கிளின்ரன் தெரிவித்தார்.

இதே வேளை —

தாஜ்மஹாலுக்கு கிளின்ரன் விஜயம் செய்வதற்கு எதிர்ப்புத்தெரிவித்து அதன் பின்புறப் பகுதியில் கறுப்பு நாடா கட்டப்பட்ட சுமார் 100 பலூன்கள் பறக்கவிடப்பட்டிருந்தன. (ஐ-6-9)

## பாடசாலைக்கு மாடிக்கட்டடம்

தென்மராட்சி மார்ச் 24

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மாடிக் கட்டடம் மற்றும் மலகூடம் ஆகியவற்றை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் இவ்வருடம் அமைத்துக் கொடுக்கவுள்ளதாக கல்லூரி அதிபர் மு. நாகேந்திரராசா தெரிவித்தார்.

[ஐ-117]

## சைக்கிள் உரிமத் தகடு

தென்மராட்சி, மார்ச் 24

பளைப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் இவ்வருடத்திற்குரிய துவிச்சக்கர வண்டி இலக்கத் தகடுகள் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச சபைச் செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனத்தினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள சாதனா போதனா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சி.ஈ சாதாரண தரத்தில் கல்வி கற்ற 16 வயது தொடக்கம் 26 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

நான்கு மாதங்கள் நடைபெறும் இப் பயிற்சி நெறிக் காலத்தில் மாணவர்களுக்கு உதவு தொகைவழங்கப்படும். அத்துடன் பயிற்சி முடிவடைந்ததும் சான்றிதழும் வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் இம் மாதம் 29 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகமைப் பத்திரங்கள், கிராம அலுவலரின் நற் சான்றிதழ் உட்பட வேறுஇரண்டு நற்சான்றிதழ்களுடன் மருதனார் மடத்தில் உள்ள விவசாய நிறுவனத்துக்கு நேரில் வருமாறு அதிபர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)


### அபூர்வ ஜோதிடம்

- நோயின் அவலத்திலிருந்து விடுதலைபெற!
- அதிர்ஷ்டத்தை நோக்கிய வாழ்வு!!
- சிக்கிய பிரச்சினைகளை விரைந்து அகற்றல்!!!

அபூர்வ ஜோதிட நிலையம்,
No: UP 304, ஆலடிச் சந்தி
பலாலி வீதி, கந்தர்மடம்.

[74754]

### BEACON (வெலிங்டன் சந்தி அருகில்)

இந்து நாகரிகம்
A.L 2000
1999 DAY

பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான
துரித மீட்டல் வினாவிடை வகுப்புகள்.
ஆரம்பம்: 27-03-2000 (காலை 10 மணி)
ஆசிரியர்: இ. இராஜேஸ்கண்ணன்

(74761)

யாழ். மாவட்ட
வர்த்தக சங்கங்களின் சம்மேளனம்
சகலவர்த்தகர்களுக்கும், வர்த்தகசங்கங்களுக்குமான

### அன்பான வேண்டுகோள்

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினால், நாலு அம்சக் கோரிக்கையை முன்வைத்து நடத்தப்படும் மாபெரும் சமாதானப் பேரணிக்கு வர்த்தக சமூகத்தின் ஆதரவைத் தெரிவிக்குமுகமாக 25—03—2000 சனிக்கிழமை யாழ். மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் மூடி சமாதானப் பேரணியில் சகல வர்த்தக சங்கங்களும், சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம்
இல. 27, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/11522)

### யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

சகல வர்த்தகர்களுக்குமான

### அன்பான வேண்டுகோள்

தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தின் கொடூரத் தன்மையால் தமிழ் மக்களும் யாழ். வர்த்தக சமூகமும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்பதனை தென்னிலங்கை மக்களுக்கும், வெளிநாடுகளுக்கும் தெரியப்படுத்துவது யாழ். வர்த்தகர்களின் தார்மீகக் கடமை. ஆகவே 25-03-2000 சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெறவிருக்கும் மாபெரும் சமாதானப் பேரணிக்கு எமது ஆதரவை வழங்க வேண்டுமெனவும் அன்றைய தினம் 25-03-2000 சனிக்கிழமை சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் மூடி சமாதான முயற்சிக்கான ஆதரவுப் பேரணியில் சகல வர்த்தகர்களும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.
இல. 27, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/11511)

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

### பொதுக்கூட்ட அறிவித்தல்

இடம்: யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கேட்போர் கூடம்.
காலம்: 09-04-2000, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி.

அனைத்து அங்கத்தவர்களும் சமுகமளித்து புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்யும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அன்று நடைபெறும் மதிய போசன விருந்தில் பங்கேற்க விரும்பும் அங்கத்தவர்கள் 06-04-2000 க்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் 100/- செலுத்திப் பதிந்து கொள்ளவும்.

ஆ. ஜெயபாலசிங்கம்
(செயலாளர்)

த. சிவகடாட்சம்,
(தலைவர்.)

[74769]

# சர்வதேச இந்துமத குருமார்ஒன்றியம்
## முக்கிய அறிவித்தல்

நாளை (25 — 03 — 2000) சனிக்கிழமை நல்லூர் முன்றலில் காலை 9.00 மணிக்கு (புதிய நேரம்) நடைபெற இருக்கும், மாபெரும் சமாதானப் பேரணியில் எமது அமைப்பின் சகல அந்தண பெருமக்களையும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான பேரணியில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

மு. கு. 25 - 03 - 2000 காலை 8 மணிக்கு எமது தலைமைக் காரியாலயத்துக்கு [நீராவியடி] அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா
(பொதுச் செயலாளர்)

தலைமைச் செயலகம்,
இல. 74, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
[74765]

# வர்த்தகர் சங்கக் கூட்டம்

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வர்த்தக சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# டாக்டர்கள் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

இடர்காலக் கொடுப்பனவு தொடர்பாக நேற்று முன்தினம் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நடத்தப்படவிருந்த தொழிற் சங்க நடவடிக்கை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கை தொடர்பாக சுகாதார அமைச்சு பேச்சு நடத்த சம்மதம் தெரிவித்துள்ளதையடுத்தே இத் தொழிற் சங்க நடவடிக்கை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் நடராசா

சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடராசா 14 - 03 - 2000 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிள்ளையினார் மற்றும் இராசம்மா, அப்பாத்துரை, பொன்னுத்துரை, இராமனாதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (24 - 03 - 2000) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்குச் சங்கானை விழாவளி கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சரஸ்வதி நடராசா
(மனைவி)
சங்கானை.

## சுப்பையா அமிர்தலட்சுமி

அராலி வடக்கு, செட்டியாமடத்தைச் சேர்ந்த சுப்பையா-பொன்னம்மா தம்பதியினரின் மகள் அமிர்தலட்சுமி காலமானார்.

அன்னார் முருகையா (இத்தாலி), செல்வராசா (மாலா சைக்கிள் வேக்ஸ், சங்கானை), கந்தசாமி (மட்டக்களப்பு), சண்முகநாதன், லோகநாதன் (இத்தாலி), நேசரெட்ணம் (சரசாலை), தவமலர் ஆகியோரின் சகோதரியும் தனலெட்சுமி, மனோகரி, விக்கினேஸ்வரி, தேவமனோகரி, நாகராசா (கலைவாணி நகை மாளிகை) ஆகியோரின் மைத்துனியும் வரதராசா, கௌரி (கமலாசனி வித்தியாலய ஆசிரியை), சாளினி, அனோஜினி ஆகியோரின் பெரிய தாயாரும் உஷாநந்தினி சிவாநந்தினி, ஜெனனி, ஜெனா, சுதன், தர்சினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (23-03-2000) அராலி மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சோ. நாகராசா
(முகாமையாளர்)
கலைவாணி நகை மாளிகை,
யாழ்ப்பாணம்.
(74774)

## திருமதி செல்வதி செல்லையா

வேலணை துறையூர் 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லையா அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி செல்வதி செல்லையா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு—சின்னம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற மனோன்மணி, பேரம்பலம், சதமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிந்தாமணி [அதிபர், வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்], சிவஞானம், நடேசகாந்தன் [ஆசிரியர், புங்குடுதீவு மகாவித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தையா பழனி [கிறைசெட் எஸ்ரேட் உடகென்ன], ஜெகதீஸ்வரி [யாழ். போதனா வைத்தியசாலை] ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌடில்யன், சரண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (24—03—2000) வெள்ளிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இறுதிக்கிரியைக்காக வேலணை தாளையங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சி. பழனி (மகள்)
(வேலணை ஐயனார் வித்தியாலயம் அதிபர்)
திரு செ. நடேசகாந்தன்
(மகன்)
(புங்குடுதீவு ம. வி. ஆசிரியர்)
(74778)

# இலங்காலைச் சிந்தனை

பதினேழாம் நாள்

"கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்திற்கு மூலைக் கல்லாயிற்று" (மத். 21-42)

எமது பார்வைகள் பலவிதம் இறைவனின் பார்வை ஒரு விதம் நாம் சமுதாயத்தில் உயர்ந்த பதவியில் விருப்போரையும் படித்தவர்களையும் அந்தஸ்தில் உயர்ந்தவர்களையும் எமது உறவுகளாக்கவும் நண்பர்களாக்கவும் துடிக்கின்றோம்.

இயேசு வாழ்ந்த காலத்தில் சாதிப்பிரிவினைகளும் ஏற்றத் தாழ்வுகளும் மலிந்து காணப்பட்டன. இதனால் தான் இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் எல்லாவற்றுக்கும் சவுக்கடி கொடுக்கின்றார். தலைமைக் குருக்களையும் மூப்பர்களையும் கண்டிக்கின்றார். அவர்களுடைய வாழ்க்கை முறையில் காணப்படும் வரட்டுக் கௌரவங்களைச் சுட்டிக் காட்டுகின்றார்.

இன்றும் எமது மதிப்பீடுகள் பலவிதம் பகட்டானவர்களையும் வெளிவேடக்காரர்களையும் நாம் உயர்ந்தஇடத்தில் வைத்து மதிப்புக்கொடுக்கின்றோம். நியாயத்தைக் கூறுபவர்களையும் உண்மையை எடுத்துரைப்பவர்களையும் ஒதுக்கி விடுகின்றோம். அவர்களோடு உரையாடுவதையே ஆபத்து எனக் கருதுகிறோம். தானுண்டு தன் அலுவல் உண்டு என வாழ்பவனே நல்லவன் என்ற வரையறை போட்டு வைத்துக் கொள்கின்றோம். மற்றவர்களுடன் அன்பாக பழகுபவர்களையும் உதவி செய்பவர்களையும் வாழத் தெரியாதவன் வேலையற்றவன் ஊரோடி எனப் பல நாமம் சூட்டி பிரசாரம் செய்கின்றோம்.

நாம் யாரையும் புறக்கணிக்கக்கூடாது எல்லோரும் மனிதர்கள் மனித மாண்புடையவர்கள் என்ற உணர்வுடன் செயற்படுவோம். அப்போது தான் எமது வாழ்வு அர்த்தமுடையதாக மாறும்.

யோ. மாலினி
திருநெல்வேலி

# கீரிமலைப் பாடசாலைக்கு குடிதண்ணீர் வசதி இல்லை
## மாணவர்கள் பாதிப்பு

சண்டிலிப்பாய், மார்ச் 24

சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் பிரிவில் தனியாருக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் இயங்கிவரும் கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குடிதண்ணீரைப் பெறுவதற்கு மாணவர்கள் அயல் வீடுகளிலுள்ள கிணறுகளை நாடிச் செல்வதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 1990 ஆம் ஆண்டில் கீரிமலையிலிருந்து இடம்பெயர்ந்த இப்பாடசாலை இதுவரை ஏழு இடங்களில் இடம்பெயர்ந்து இயங்கி வந்துள்ளது. தற்போதைய இடம் எட்டாவது இடம் ஆகும். இங்குள்ள மாணவர்களில் பெரும்பாலானோர் அகதி முகாம்களிலிருந்து கற்க வருபவர்கள் என்றும் மிகவும் வசதி குறைந்த நிலையிலுள்ளவர்கள் என்றும் அறியப்படுகின்றது.

இடம்பெயர்ந்த பாடசாலையாக இருப்பதால் இதற்கு வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவிகளும் கிடைக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இங்கு மலசலகூட வசதிகளும் இல்லாத நிலையில் மாணவர்கள் சிரமமடைந்து வருகின்றனர். தளபாடங்களும் பற்றாக்குறையாக உள்ளன.

170 மாணவர்கள் — அதுவும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மாணவர்கள் — கற்கும் இந்த மகாவித்தியாலயத்தின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

[ஐ—135]

# புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா, மார்ச் 24

திருகோணமலை அன்பு வெளிபுரம் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்துள்ளது.

கப்டன் அறிவு அல்லது அறிவன் (பொன்னம்பலம் செல்லக்குமார் — திருகோணமலை) என்பவரே உயிரிழந்தவராவார்.

(ஐ-க)

# சான்றிதழ்கள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 24

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்ட பட்டபின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் 1997 ஆம், 98 ஆம் ஆண்டுகளில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் இ. த. ஆ. சங்கத்தின் சி. து. பொ. செயலாளர் த. பஞ்சலிங்கத்தினால் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டு சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி எஸ். விஸ்வநாதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ-3)


லஷ்சுமி சினிமா
இன்று இரவில்
எம். ஜி. ஆர்,
ஜெயலலிதா
நடித்த
நீரும் நெருப்பும்
10.30, 2.30
(பழைய நேரம்)
(74762)


உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனித் திங்கள் 12 ஆம் நாள் (25-03-2000) சனிக்கிழமை முற்பகல் 10-45 மணி முதல் 11-45 மணிவரை வரும் இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| திருநிறைசெல்வன் | திருநிறைசெல்வி |
|---|---|
| சதீஸ்குமார் (மூர்த்தி) | அயராஜிதா |
| அவர்களுக்கு | அவர்களை |

திருவருள் துணைகொண்டு 317, நாவலர் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி
செ. பாக்கியராஜா
பாடசாலை வீதி,
வலையிறவு,
மட்டக்களப்பு.

திரு. திருமதி
பிலிப் செல்லத்தம்பி யோசப்
அரிசி ஆலை வீதி,
வலையிறவு.
மட்டக்களப்பு.

திருமதி வி, முத்துக்குமாரசுவாமி
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

திரு. திருமதி செ. இராமேஸ்வரன்
(கௌரி அழகுமாடம்)
317, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(74770)

# உதயன்

## மக்கள் பேரணி

போரை நிறுத்த வேண்டும். தமிழ் மக்களுக்கு நீதியான நியாயமான தீர்வை வழங்கவேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன் வைத்து நாளை யாழ்ப்பாணத்தில் சமாதானப் பேரணி நடத்தப்பட உள்ளது. சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இந்தப் பேரணியை ஒழுங்கு செய்திருக்கிறது.

இந்தப் பேரணியில் கலந்து கொண்டு மேற்கண்ட கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கவும் தமது மனவிருப்பத்தை வெளிப்படுத்தவும் சமய, சமூக தொழில்சார் அமைப்புகள் பெரும் எண்ணிக்கையில் முன் வந்துள்ளன. மக்களைப் பங்கு பற்றுமாறு அழைப்பும் விடுத்துள்ளன.

போரினால் பெரிதும் பாதிப்புறுவோர் தமிழ் மக்கள். அதனால் அவர்கள் போரை நிறுத்த வேண்டும் என்று கேட்பது இயல்பே. அவ்வாறு கேட்பதனால், தமது உரிமைகளை விட்டுக்கொடுக்க மனங்கொண்டு விட்டனர் என்பது அர்த்தம் அல்ல.

மனிதன் ஒவ்வொருவனும் அமைதிச் சூழலிலேயே வாழ விரும்புவான். போர்ச் சூழலில் வன்செயல் சூழலில், பதற்றமான சூழ் நிலையில் வாழ விரும்புபவர்கள் இல்லை. இந்த அமைதிச் சூழல் உருவாக இலங்கையில் அமைதி பிறக்க வேண்டும். அமைதி தோன்றுவதற்கு தமிழர்களின் பிரச்சினைக்கு நீதியான தீர்வு காணப்பட வேண்டும்.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு நீதியான தீர்வு ஒன்று வகுக்கப்பட வேண்டும். அரைகுறைத் தீர்வுகளை வைத்துக்கொண்டு சமாதானத்தை உருவாக்க அரசாங்கம் நினைக்கக்கூடாது. நீதியுடனான சமாதானமே தேவை. வடக்கும் கிழக்கும் பிரிக்கப்படாத தமிழர் தாயகத்தில் சுயாட்சி அதிகாரம்கொண்ட ஆட்சி முறையே தமிழர்களின் ஆகக் குறைந்த அரசியல் கோரிக்கை.

இத்தகைய ஒரு நீதியான தீர்வு உருவாகுவதற்கு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவை. நீதியான தீர்வு ஒன்று உருவாகுவதற்கு மட்டுமன்றி அது முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படவும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் அவசியமாகிறது.

இந்த வகையில் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் தொடங்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சு முன் முயற்சி ஒரு நல்ல ஆரம்பம் என்று தமிழ் மக்கள் கருதுகிறார்கள். முந்திய பேச்சுக்களின் கதி இதற்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பது அவர்களின் பிரார்த்தனையாக உள்ளது. முந்திய அனுபவம் அவ்வாறு பிரார்த்திக்கச் செய்கிறது.

இப்போதும் சமாதான பேச்சுக்கள் வேண்டாம் என்ற குரல் தெற்கிலிருந்து கேட்கிறது.

தமிழர்கள் அமைதியையும் சமாதானத்தையும் விரும்பவில்லை என்ற கருத்துக்கே இடமில்லை. அவர்கள் கேட்பதும் போராடுவதும் தமக்குள்ள பிறப்புரிமைகள் உட்பட்ட நீதியான உரிமைகளையே.

மேற்கண்ட நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் நிகழ்வாக நாளைய சமாதானப் பேரணி அமைகிறது. அதில் சகல தரப்பினர்களும் எவ்வித பேதமுமின்றிக் கலந்துகொண்டு ஒரே குரலில் ஒலிக்க வேண்டும். போர் நிறுத்தப்பட வேண்டும், நீதியுடனான சமாதானம் வேண்டும் என்ற யாழ்ப்பாணத்தின் குரல் நாளை ஓங்கி ஒலிக்கட்டும்; மக்கள் பேரணியாக மலரட்டும்.

# ஆண்டு தோறும் 5 லட்சம் பேரின் உயிர்களைப் பலிவாங்கும் காசநோய்

உலக காசநோய் தினம் இன்றாகும். இதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகுகின்றது.

ரி.பி. என்பது 'வெள்ளை பிளேக்' என வரலாற்றில் இடம்பெற்ற ஒரு நோயாகும். நியோலிதிக் மனிதன், எகிப்திய மம்மீக்களின் எலும்புகளில் இது இருந்ததாகக் குறிப்புகள் உண்டு.

'மருந்தின் தந்தை' எனச் சொல்லப்படும்கிறீஸில் கி.மு. 460 இல் பிறந்த ஹிப்போக்கிறற்றீஸ் மனிதர்களின் நோய்கள் பற்றிய ஆய்வுகள் செய்தார். TB பற்றிய அவரது அவதானங்கள் இன்றைய குறிப்புகளோடு ஒத்திருப்பது வியப்பாக இருக்கிறது.

ஜேர்மனியில் 1895 இல் பிறந்த கொன்றாட் றொன்ஜன் X — கதிரைக் கண்டு பிடித்தார். அதனால் TB நோயாளி ஒருவரில் கிருமியின் கெடுதலை அறிய முடிந்தது.

லூயி பாஸ்ரர், றொபேட் கொச் ஆகிய பிரான்ஸிய விஞ்ஞானிகளின்கண்டுபிடிப்புகள் TB யைத் தடுப்பதற்குப் பெரிதும் உதவின.

அல்பேட் கல்மெற், கமைல் குறின் ஆகிய இரு விஞ்ஞானிகள் TB க்கு எதிரான சக்திகளைக் கண்டு பிடித்து அதிலிருந்து BCG எனும் தடுப்பூசியினை உருவாக்கினர் (Bacillus Calmette Guerin)

1904 ஆம் ஆண்டு TB முத்திரை அல்லது உலக முதலாவது கிறிஸ்மஸ் முத்திரை உருவாக்கப்பட்டது. செல்வி எமிலி பிசெல் இதனை அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்குக் கொண்டு சென்று அறிமுகம் செய்தார். அதில் சிவப்பு நிறமுடைய குறுக்கான இரட்டைக் கோடுகள் உள்ளன. இதுவே சர்வ TB கழகத்தின் சின்னமாகும்.

1882 இல் றொபேட் கொச் TB க்குரிய கிருமியாகிய ரியூபேக்கிள் பசிலஸைக் கண்டு பிடித்தாலும் அதற்குரிய மருந்துகள் நீண்டகாலமாக இல்லாதிருந்தன. 1944 இல் கண்டு பிடிக்கப்பட்ட ஸ்ரெப்ரோமைசின் எனும் ஊசி மருந்து TBக்கு ஒரு மருந்தாக அமைந்தது.

இதன் வரலாற்றில் பிறேசில் நாட்டைச் சேர்ந்த மனேக்ல் டி அபுறா எனும்விஞ்ஞானிக்குத் தனியிடமுண்டு. 1936இல் 'மாஸ் மின்யேச்சர் றேடியோ கிறாபி' என்ற வகையான X — கதிர் மருத்துவத்தை அறிமுகப்படுத்தி TB-க்கு எதிரான சக்தியை உருவாக்கினார்.

TB-க்கு மருந்தில்லாக் காலம்! பல அறிஞர்களை ஆற்றல் வாய்ந்தவர்களை' அறிவியலாளர்களை அள்ளிக் கொண்டு போய்விட்டது. அதில் ஆங்கிலக்கவிஞர் ஜோண் கீற்ஸ் உம் ஒருவர். மருந்துக்குப் பணமில்லாத நிலையில் மருந்தும் வலிமையானதாக இல்லாத வேளையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்குலஸ் கணிதமேதை இராமானுசம் TB க்கு இரையானார்.

உலகின் ஒரு வீதமான மக்கள் TB யால் பீடிக்கப்பட்டுள்ளனர்; ஒரு லட்சத்துக்கு 6–7 ஆயிரம் பேர் இறந்துவிடுகின்றனர். வீடு, பாடசாலை போன்ற இடங்களில் மக்களின் சுவாசத்தின் மூலம் TB கிருமிகள் மற்றையவர்களுக்குத் தொற்றிட வாய்ப்புகள் அதிகம்; போசாக்கின்மை, துப்பரவற்ற வீடு, குப்பையான சுற்றாடல் இந்த நோயினை வளர்த்திட வாய்ப்பான இடங்களாகும்.

வயது வேறுபாடு இல்லாது மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் இந்நோய் வருகின்றது.

உலகில் 80 வீதமான TB நோயாளர்கள் வளர்முக நாட்டிற்றான் உள்ளனர். ஆண்டு தோறும் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் இறக்கின்றனர். வறுமை, அறியாமை இதனை வளர்க்கின்றது. இது வறுமையானவர்களின் வருத்தமாகும்.

இலங்கையில் 80 ஆயிரம் TB நோயாளர்களில் 5000 பேர் (1967) இறந்துள்ளனர்.

இப்பொழுது இந்நோய் பற்றி விழிப்புணர்வு உண்டாக்கப் படுகிறது. X—கதிர் மூலம் நோய் கண்டுபிடிக்கப்படுகிறது; BCG தடுப்பூசி போடப்படுகிறது; பெரிய மருத்துவ மனைகளில் TB— பகுதி உண்டாக்கப்பட்டுள்ளது இது ஒரு பரம்பரை வியாதியல்ல; ஆனால் அடுத்தவருக்குத் தொற்றக் கூடியதாகும்; பயங்கரமானதுமல்ல மாற்றக் கூடியது மாகும்.

ரியூபேக்கிள் பசிலஸ் எனும் கிருமியினால் இந்நோய் உண்டாகிறது. இது, சுவாசம், உணவுக் கால்வாய் வழியாக உட்செல்கிறது. மிக அருமையாகத் தோலூடாகவும்செல்கிறது சுவாசவுறுப்பை அடைந்த கிருமிகள் நிம்-சுரப்பிகளூடாகப் பரவுகிறது.

யாழ்ப்பாணத்தில்பண்ணை மயிலிட்டி, காங்கேசன்துறை தற்பொழுது சாவகச்சேரி ஆகிய இடங்களில் இதற்கான பரிசோதனையும் சிகிச்சையும் நடைபெறுகிறது. ஜோசேப் ஹேக் அவர்களின் நினைவாக கந்தானையில் பெரிய மருத்துவமனை ஒன்றுள்ளது.

**லயன் அ. பொ. செல்லையா**

★

# கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே!

# கண்ணபரமாத்மா கூறும் கீதோபதேசம்

**ஞானக் கதிர்**

'இப்பூவுலகில் அநியாயமும் அக்கிரமமும் அதிகரித்து நேர்மையும் நீதியும் நியாயமும் மறைக்கப்படும் தருணத்தில் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்துக்காக நான் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்', என்று கிருஷ்ண பரமாத்மா கூறியருளியுள்ளார்.

அந்த மகா விஷ்ணுவை வழிபடுகின்ற சமயமே வைஷ்ணவம்.

இந்துமதத்தின் கிளையே வைஷ்ணவம், விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட இதுகாலங் கடந்த தொன்மை மிக்கது.

''மாயோன் மேய காடுறை உலகமும்'' என்ற தொல்காப்பியப் பாடலினால் முல்லை நிலக் கடவுளாக வேதங்களில் குறிப்பிடப்படும் ஆநிரை மேய்ப்பவன் கண்ணன்.

அத்தகைய கண்ணன் ஓர் அவதார புருஷன் எனப் போற்றப் பெறுகிறான். கடவுள் மனித வடிவில் வந்து கீதையை விளக்கியதன் மூலம் கடவுளை அனைவரும் எளிதில் அடைய முடியும் என்ற உண்மை புலப்படுகின்றது.

வைஷ்ணவத்தின் அடிப்படையான சித்தாந்த உண்மை, கடமையைச் செய், பலனை எதிர்பாராதே! என்ற பகவத் கீதையின் தத்துவமேயாகும்.

வைஷ்ணவ சித்தாந்தத்தின் படி தன்னை விஷ்ணுவுக்கு அடிமை (தாஸன்) என்று கருதுபவனே ஒரு வைஷ்ணவன் ஆவன் ''உன்னிடம் சரண்புகுந்த எனக்கு வேறு புகலிடம் ஏது?'' என்றும் ''யான்பெற்ற நன்மை இவ்வுலகினில் யார் பெறுவார்?'' என்றும் கருதி சரணாகதி நிலைக்கு யார் உயர்கின்றார்களோ அவர்தான் உண்மையான விஷ்ணு பக்தன் ஆகின்றார்.

''கடவுளின் அருளுக்குப் பாத்திரமானவனே நாராயணனைக் காணமுடியும்'' என்கிறது மகாபாரதம். மேலும், அன்பு, பிரேமை போன்றவற்றை வலியுறுத்தும் நோக்கில் அவதார புருஷனான கண்ணனும் பகவத்கீதையில்:

''இலையேனும், பூவேனும்,
கனியேனும், நீரேனும்
அன்புடனே எனக்கு
அளிப்பவன் ஆயின்
முயற்சியுடைய அன்னவன்
அன்புடன்
அளித்ததை உண்பேன்
யான்''

என்று பகர்வதை அறிய முடிகின்றது.

கடவுளின் மேலான தன்மைகளிலும் குணங்களிலும் அன்பு செலுத்துவதே பக்தி. அவனழகில் ஈடுபடுவதும் அதனையே தின நினைப்பதும், வழிபடுவதுமே பக்தி ஸ்ரீஆண்டாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாக விளங்கிக் கண்ணனின் மேல் கொண்ட அன்பு உண்மையான பக்தியை வெளிப்படுத்துகின்றது.

அதுமட்டுமன்றி யசோதையின் கயிற்றுக்குக் கட்டுண்டதை எளிமைத் தன்மைக்கும் மூவுலகும் இருண்திர நடந்தமையை நீர்மைக்கும் இலங்கையைக் கட்டளித்த நீர்மையை செம்மைக்கும், பாண்டவர்களுக்காக தூது நடந்தமையைப் பரிவுக்கும் அமரர்கள் தொழுதேத்த நிற்கும் தன்மையைத் தலைமைக்கும் உதாரணங்களாகக் காட்டுவர்.

இக்கலியுகத்தில் எம்மைச் சுற்றியுள்ள துன்பம் நீங்குவதாயின் இவ்வுலகிலுள்ள ஜீவராசிகள் மீது அன்புகாட்டுதல், எம்பெருமானுக்குத் தொண்டுபுரிதல், இறைவன் நாம ஜெபத்தை இடைவிடாது உச்சரித்துத் தியானித்தல் ஆகும். பணிவிடைக்கும், ஜெபத்திற்குமாக எவன் ஜீவிக்கிறானோ அவனே இறைவனின் அன்புக்குப் பாத்திரமாகின்றான்.

மகாத்மா காந்தியடிகள் கூட இக்கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட முதிர்ந்த விஷ்ணுபக்தர். அவர் உயிர் துறக்கும் தறுவாயிலும் 'ராம் ராம்' என்ற நாம ஜபத்தோடு உயிர்நீத்தவர் ''ரகுபதி ராகவ ராஜா ராம்! பதீத பாவன சீதாராம்'' என்ற பாடலே மகாத்மா காந்திஜியின் ஆத்மார்த்தமான பஜனைப்பாடலாகும்.

ஆதலால் நம் துன்பம் எனும் சாஹரம் விலகிட அன்பு, பிரேமை, பக்தி, வழிபாடு, பூஜை, நாமஜெபம், தியானம் ஆகியவற்றோடு வாழ்ந்து அவனருள் பெறுவோமாக.

**என். தவராஜா**

★

## நாளை

பங்குனி 12
சனிக்கிழமை
திதி: பஞ்சமி
முற்பகல் 11.13 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
நள்ளிரவு 12.00 வரை.
ஏமநேரம்: 3.15—4.45
சகுனகாலம்: 9.15—10.45
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

மொழி, என்பது கருவி மட்டுமன்று; தன் நாகரிகத்தின், பண்பாட்டின் உயர்ந்த சிந்தனையின் பேழையுமாகும்.

டாக்டர்
மா. நடராஜன்

## கண்காட்சியும் விற்பனையும்

கைதடி, மார்ச் 24

அறவழிப் போராட்டக்குழு நடத்தும் தையற் பயிற்சி நிலையத்தவர்களால் தயாரிக்கப்பட்ட தைத்த ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும் கைதடி சித்த மருத்துவ வளாக மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் வி.ஜி. தங்கவேல் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் யாழ். சர்வோதயச் செயற்றிட்டப் பணிப்பாளர் திருமதி ரி. சங்கரப்பிள்ளை முதன்மை விருந்தினராகவும் தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம், கைதடி அரச மருந்தகப் பொறுப்பதிகாரி டாக்டர் லயன் பொ. சண்முகரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்.

(க-74)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறி விட்டது

[illegible] [0904032228] 21-3-2000 அன்று [illegible] தவறிவிட்டது. [illegible] முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
[74757]

[illegible] (இல. 670032 1630X) தவறிவிட்டது. [illegible] யாழ்ப்பாணம் [illegible]
(74749)

### விற்பனைக்கு

YAMAHA-PSS 36, [illegible] பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு [illegible] வட்டுக்கோட்டை.
(74746)

115 [illegible] 36 [illegible] (Crank Standard) [illegible] SD 125 [illegible] Japan Food Processor [illegible] தொடர்பு [illegible] 115, [illegible]
(74742)

### இருந்த[illegible] தேவை

[illegible] 1951 [illegible] 1980UK, 1987 MSc Engineer USA, 1989 MSc Engineers [illegible] KKS வீதி, [illegible] யாழ்ப்பாணம்.
(74650)

### வீடு [illegible]

[illegible] தொடர்பு: [illegible] (74750)

### [illegible]

[illegible] தொடர்பு: S. [illegible] (74695)

## மின் விநியோகம்

[illegible] (S—111)

---

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி (Broiler) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சனி,ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மட்டும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: கல்லூரி, ஒழுங்கை, வட்டுக்கோட்டை.
[74753]

### கைச்சங்கிலி தவறிவிட்டது

அரியாலை கனகரத்தினம் வீதியிலிருந்து வெட்டுக்குளம் பிள்ளையார் ஒழுங்கை, நாயன்மார்கட்டுக் கிடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டு எடுத்தவர்கள் மனிதாபிமான முறையில் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். திரு. வே. பேரம்பலம் 138, கனகரத்தினம் வீதி, அரியாலை.
[74744]

# மரண அறிவித்தல்கள்

## FRANK N. PUSHPANAYAGAM

*(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன ஆங்கில செய்தி ஆசிரியர், கொழும்பு பல்கலைக்கழக பகுதி நேர விரிவுரையாளர்)*

இவர் 7-3-2000 ஆம் திகதியன்று கொழும்பில் கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி நேசமாணிக்கத்தின் அன்பு மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும் சுமங்கலி, விரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், றொகானின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற புஷ்பரட்ணம், புஷ்பராணி புலேந்திரன், புஷ்பநாயகி, மேதர், புஷ்பரஞ்சிதம் ரட்ணதிலக (டொக்கி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இவரது நல்லடக்கம் கனத்தை மயானத்தில் 9-3-2000 அன்று நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K. புலேந்திரன்
(மைத்துனர்)

34/4, பி இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
(74755)

## திருமதி காசிப்பிள்ளை அன்னப்பிள்ளை

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி காசிப்பிள்ளை அன்னலட்சுமி 21-03-2000 அன்று செவ்வாய்க்கிழமை அராலியில் காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. த. காசிப்பிள்ளை (நீர்ப்பாசன திணைக்கள ஓய்வூதியர்] யின் அன்புமிகு மனைவியும் விவேகானந்தன் [பிரான்ஸ்], புஷ்பாஞ்சலி, விமலாஞ்சலி, திருஞானசம்பந்தன், நித்தியானந்தன்[பிரான்ஸ்] சச்சிதானந்தன் [Grandmel Travels and Tours-Colombo] ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமாரன் [யாழ் பல்கலைக்கழகம்], சிவரூபன்[Accountant-Srilanka Cricket Foundation-Colombo], ஜெயதேவி [பிரான்ஸ்], சவுந்தலா [பிரான்ஸ்], ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீஸ், அபிராமி, ராகுலன், சுபாசன், விலீசன், சர்மிலா, நிரோசன் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பேராசிரியர் ஆ. சதாசிவம், ஆ. நடராசா, ஆ. கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாவும் 23-03-2000 வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி தெற்கு பூனாவடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா. சச்சிதானந்தன்
(மகன்)

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
(74747)

## ஞானப்பிரகாசம் அருளப்பா

(ஓய்வுபெற்ற ஓவசியர், மாடுகொட)

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அருளப்பா 18-03-2000 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மேரி திரேசாவின் அன்புக்கணவரும் மகள் (கனடா), வனிதா (கனடா), குமாரி (லண்டன்), லோஜினி (கனடா), ஜோய் அருள்ராஜ் (கனடா), மீனி ஆகியோரின் அன்புத்தகப்பனாரும் ஞானேந்திரன், ஞானச்சந்திரன், பசில் செல்வராஜா, லக்ஸ்மன், குமுதினி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25-03-2000) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து பற்றிமா மாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மேரி திரேசா
(மனைவி)

பற்றிமா மாதா கோயிலடி,
பண்டத்தரிப்பு.
(74767)

---

உ

# நவசக்தி முன்பள்ளி கட்டடத் திறப்புவிழா

இடம்: நிலைய திறந்த வெளியரங்கு
காலம்: 25-03-2000 சனிக்கிழமை மாலை 2 மணி

தலைவர் திரு. வே. துரைசிங்கம்
[கிராம உத்தியோகத்தர் மட்டுவில்]

### பிரதம விருந்தினர்கள்

★ திரு. க. கேதீஸ்வரன்
[பிரதேச செயலர் கோப்பாய்]

★ திரு. எஸ். வி. சங்கரப்பிள்ளை
[செயற்திட்ட இயக்குநர் சர்வோதயம்]

★ திரு. அ. நல்லதம்பி
[தலைவர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்]

### சிறப்பு விருந்தினர்கள்

★ திரு. அ. க. த. கிருஷ்ணராஜா
[செயலாளர், அரிமாக்கழகம் உரும்பிராய், சமாதான நீதிவான், தலைவர், வலி. கி. தெ. ப. ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி]

★ லயன் திரு. இ. நடராஜா
[பொறியியலாளர், தலைவர் அரிமாக்கழகம் உரும்பிராய்]

★ திரு T. V. கிருஸ்ணசாமி
[உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாவட்டம்]

### கௌரவ விருந்தினர்கள்

★ திரு சு. யோகராசா
[முதல்வர், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்]

★ திரு. த. தங்கராசா
[கிராம உத்தியோகத்தர், உரும்பிராய் வடக்கு]

★ திரு. V பஞ்சலிங்கம்
[முன்னாள் அதிபர், யா/இந்துக்கல்லூரி]

★ திரு. V கதிரவேலு
[முன்னாள் அதிபர், றோ. க. பாடசாலை, உரும்பிராய்]

★ திரு. செ. குகதாசன்
[செயலாளர், வலி. கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நவசக்தி சனசமூக நிலைய நிர்வாகிகள்.
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

N. S. செல்லத்துரை அன்சன்ஸ்

### ராஜா தொலைத் தொடர்பகம்

கற்பகப்பிள்ளையார் வீதி, உரும்பிராய்.
(சைவத்தமிழ் வித்தியாலயம் அருகில்)
உள்நாடு: 070 — 212518
வெளிநாடு: 0094 — 70 212518
(74751)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி இராசா தங்கம்மா

மலர்வு 13-01-1916
உதிர்வு 04-04-1999

திதி: 24-03-2000

அன்பிற்கும் அறிவிற்கும் உரிய
பாசமிகு எங்களது அன்னையே!
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் அன்பு நினைவலைகள்
என்றென்றும் மாறாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(74756)

# சங்கீத, நடன ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

1998 ஆம் ஆண்டு மே மாதம் வர்த்தமானி மூலம் கோரப்பட்ட சங்கீத, நடன ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகளுக்கு 227 பேர் அழைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயம் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 3ஆம் திகதி தமது அலுவலகத்தில் இடம்பெறும் என்று அந்த வலயம் அறிவித்துள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டுள்ளவர்களின் ஒரு தொகுதியினர் விவரம் வருமாறு:

**சங்கீதம்**

செல்வி கே. ராகினி (31 ஆவது மைல்கல், முழங்காவில்), செல்வி சி. சுபாசினி (மணி வாசகம், கல்லூரி வீதி, பருத்தித்துறை), செல்வி கே. அழகேஸ்வரி (கோப்பாய் வடக்கு), செல்வி ரி. தயாளினி கருணாநிதி (வல்வெட்டி, வல்வெட்டித்துறை) செல்வி வி. சஜிதா (மருதடி, புலோலி தெற்கு).

திருமதி எஸ். சிவசிவா (ஐயனார் கோயிலடி, அளவெட்டி வடக்கு), செல்வி வை. நிலானி (284, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்) என். செல்வச்சந்திரன் (இல. 46, சாவல்காடு, ஆனைக்கோட்டை), செல்வி கே. பரமேஸ்வரி (ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு), திருமதி எஸ். பத்மராணி (சிவன் கோவிலடி, சுன்னாகம்).

செல்வி எஸ். சுகன்யா (செங்குந்தா லேன், திருநெல்வேலி கிழக்கு), செல்வி ஜி. வனஜா (கண்ணகை அம்மன் கோயிலடி, மாகியப்பிட்டி), செல்வி ரி. துஷ்யந்தி (பிள்ளையார் கோவிலடி, மாதகல்), கே. குகபாலன் (உசன், மிருசுவில்), ஜே. பாலகுமார் (பலாலி தெற்கு, வசாவிளான்), செல்வி என். ஜெயந்தினி (218/1, பலாலி வீதி, கந்தர்மடம்), செல்வி ஜி. நந்தினி (அராலி வடக்கு), செல்வி என். பிறேமா (571/3 காலி வீதி, கொழும்பு - 06), செல்வி என். ஜெயகௌரி (கரவெட்டி மேற்கு). செல்வி என். சர்மிலா ('திலகபதி', நுணாவில்).

செல்வி வி. கௌலகுமாரி (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), செல்வி ரி. பங்கயற்செல்வி (டச்சு வீதி, மூளாய்), திருமதி பி. பரமேஸ்வரன் (25, கொண்டலடி லேன், நல்லூர்), செல்வி வி. தஜிதா (மீசாலை கிழக்கு), செல்வி கே. சாந்தநாயகி ('ரத்னா இல்லம், சித்தன்கேணி).

செல்வி எம். குணநாயகி (ஆர். டி. எஸ். வீதி, கோண்டாவில் கிழக்கு), செல்வி ஆர். பிரசாந்தி (இல. 12, நல்லூர்), செல்வி. வி. மதிலோஜினி (கரம்பகம், மிருசுவில்), என். மதிருபன் (முதலாவது மைல் கல், உடுவில்), செல்வி ஆர். விஜயசாந்தி (24, நீராவியடி, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்), செல்வி எஸ். விஜயகலா (பனிப்புலம், பண்டத்தரிப்பு), செல்வி கே. அமுதினி (குலனை, அராலி வடக்கு), செல்வி எஸ். விஜயகௌரி (பனிப்புலம், பண்டத்தரிப்பு) செல்வி வி. ஜெயகௌரி (242/4, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்), கே. ரவிச்சந்திரன் (நாவற்காடு, வரணி).

செல்வி ஆர். சத்யதேவி (கோப்பாய் வடக்கு), செல்வி ரி. அன்பரசி ('நடேஸ் வாசா' பருத்தித்துறை வீதி), செல்வி என். கயல்விழி (கலாஜோதி புத்தக நிலையம், பிரதான வீதி, சங்கானை), செல்வி கே. பி. கனகாம்பரி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), செல்வி ஆர். துஷாந்தி (இல. 12, ஜமுனா வீதி, நல்லூர்), செல்வி ரி. யோகாம்பிகா (வெளியோடை, அச்சுவேலி தெற்கு), திருமதி வை. சூரியவதனி (பெரிய நாவலடி), திருமதி ஆர். சுகந்தி (இல. 5, பென்றி கோஸ்ரல் லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம்), திருமதி ரீ. சிவசீலன் (46, மணல்த்தறை லேன், கந்தர்மடம்).

செல்வி ரி. உதயமலர் (196/ஏ, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), திருமதி ஈ. விக்னேஸ்வரி (குமார நகர், கைதடி மத்தி), திருமதி எஸ். ஜெயந்தி (கல்லூரி வீதி, பருத்தித்துறை), செல்வி ரி. சௌந்தராம்பிகை (கோவளம், காரைநகர்), செல்வி எஸ். பொற்செல்வி (புலோலி தெற்கு), செல்வி ரி. தமயந்தி (கைதடி வடக்கு), செல்வி என். மாதினி (ஆலங்குலை), திருமதி பி. சாரதா (டச்சு வீதி, மூளாய்).

செல்வி கே. ஜெகந்தினி (மணல் வீதி மட்டுவில் தெற்கு), செல்வி பி. கெங்காதர்சினி (இல — 44, முதலாவது லேன், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), செல்வி எஸ். கோமளா (டச்சு வீதி, மூளாய்), செல்வி எஸ். நிர்மலா (தபால் அலுவலக வீதி, சாவகச்சேரி), செல்வி பி. அனுசுயா (மூளாய் வீதி, வட்டுக்கோட்டை), செல்வி கே. குபிதா (40/1, 2 ஆவது லேன், பலாலி வீதி, யாழ்ப்பாணம்).

செல்வி வி. விஜயபாரதி (26, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, கிழக்கு), செல்வி என். கலைமகள் (சுதுமலை தெற்கு), செல்வி கே. பிரியதர்ஷினி (இல — 4, பிள்ளையார் லேன், திருநெல்வேலி), செல்வி கே. கலைவாணி (நாவற்குழி கிழக்கு, தச்சன் தோப்பு), திருமதி ஆர். லதா (காளி கோயிலடி, கோப்பாய் மத்தி), திருமதி எஸ். இராஜேஸ்வரன் (பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு).

திருமதி எஸ். குகநேசன் (கிங் அவென்யூ, உரும்பிராய் கிழக்கு), செல்வி கே. பிறேமிளா (ஏழாலை மேற்கு, சுன்னாகம்), செல்வி ஆர். ஜெயராணி (இல. 562/12, தர்மபுரம், பரந்தன்), திருமதி எம். உமாவதி (நாவற்காடு, வரணி), செல்வி எம். தயாளினி (பழைய வீதி, கோப்பாய் தெற்கு), திருமதி எஸ். மஞ்சுளா (40, சீனிவாசம் வீதி, கொட்டடி)

திருமதி பி. சுஜிதா (விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு), எஸ். ஞானசொரூபன் (கேணிக்கரை, அளவெட்டி கிழக்கு), செல்வி ஏ. குலநாயகி (31 ஆவது மைல்கல், முழங்காவில்), செல்வி சி. கௌரி (104, அரசடி லேன், தும்பளை, பருத்தித்துறை), செல்வி வை. வளர்மதி (17, வண்ணார்பண்ணை, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்), செல்வி எம். காதாம்பரி (சுதுமலை அம்மன் கோயிலடி, மானிப்பாய்)

செல்வி என். சசிதா (52, நொத்தாரிஸ் லேன், அரியாலை மேற்கு), செல்வி ஈ. தவகுமாரி (இல. 231, கோயில் வீதி, நல்லூர்), திருமதி கே. எம். மரகதவள்ளியம்மா (ஆறுமுகன் லேன், 3 ஆவது மைல்கல், கல்வியங்காடு), செல்வி கே. சரோஜினிதேவி, (19, கொண்டலடி லேன், நல்லூர் வடக்கு), திருமதி ஏ. வாசுகி (வட்டு. கிழக்கு, சித்தன்கேணி), செல்வி பி. வரதப்பிரியா (12/4, பி. ஏ. தம்பி லேன், வண்ணார்பண்ணை)

கே. ராஜன் (இணுவில் மேற்கு), செல்வி எம். சுசீலா (மீசாலை வடக்கு), திருமதி எம். ஜெயலஷ்சுமி (மட்டுவில் வடக்கு), செல்வி வி. இந்துமதி (5 ஆவது மைல்கல் அருகாமை, மட்டுவில் வடக்கு), செல்வி என். சஜிதா (சேச் லேன், 2 ஆம் குறுக்குத்தெரு, உடுவில்), செல்வி பி. சுஜிதா (கரணவாய் வடக்கு), செல்வி ஜி ஜெயகௌரி (நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை), செல்வி என். பத்மராணி (இணுவில் மேற்கு).

(சு-10)


மரணசாதன அதிகாரப் பத்திர அலுவலரால்

## வெளியிடப்படும் அறிவித்தல்

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில்

இறந்த
சின்னச்சாமி
பாலசுப்பிரமணியத்தின்
மரணச் சொத்து சம்பந்தமாக குடியியல் நடைமுறைக் கோவையின்
526ஆம், 528ஆம் பிரிவின்
கீழான விண்ணப்பம்.

வழ. இல. 257 / ம. சொ.

பாலசுப்பிரமணியம்
கைம்பெண் மனோன்மணி
கற்குளி, சாவகச்சேரி.
மனுதார்

எதிர்

1. பாலசுப்பிரமணியம் நிரஞ்சனா,
2. பாலசுப்பிரமணியம் நிறஞ்சன்,
3. பாலசுப்பிரமணியம் அனுஷா,
4. பாலசுப்பிரமணியம் தேவிகா,
5. பாலசுப்பிரமணியம் டைஸ்மாறன்.

யாவரும் கற்குளி,
சாவகச்சேரி.

எதிர் மனுதார்கள்.

காலஞ்சென்ற சின்னச்சாமி பாலசுப்பிரமணியத்தின் மரணச் சொத்து தொடர்பாக மரண சாதன நிர்வாகப் பத்திரம் பெறுவதற்காக இம்மன்றில் மனுதாரரால்விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி மரணச் சொத்து தொடர்பாக மரண சாதன நிர்வாகப் பத்திரம் ஒன்றை மேலே குறிப்பிட்ட மனுதாரருக்கு வழங்குமாறு கட்டளை ஒன்றை வழங்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும் 2000 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26ந் திகதிக்கு முன்னர் அத்தகைய ஆட்சேபனையை (சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன்) இம்மன்றில் கோப்பிடுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

மரணசாதன அதிகாரப் பத்திர
அலுவலர்.
மாவட்ட நீதிமன்று,
சாவகச்சேரி.

வரைவு:-
த. வேலாயுதம்.
மனுதார் சட்டத்தரணி.

(சி/11361)


## விவசாயக் காப்புறுதி பெற விண்ணப்பித்தோருக்கு புத்தகம்

வலி. தென்மேற்கு, மார்ச் 24

உடுவில் கமநல கேந்திர நிலையத்தின் ஊடாக விவசாயக் காப்புறுதி திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்கள் நல்லூர் கமநல சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு விவசாய சம்மேளனங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து 6 மாதங்கள் முடிவுற்ற பின் அவர்களுக்கான காப்புறுதி கொள்வனவுக்கான புத்தகங்கள் நல்லூர் கமநல சேவைகள் திணைக்கள காப்புறுதி பிரிவினால் வழங்கப்படும்.

உடுவில் கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக மேற்படி திட்டத்தின் கீழ் 910 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

(ஐ-185)

### சந்தைப்படுத்த வாய்ப்பில்லை

## வாழைகளில் வெட்டப்படாது பழுத்து அழுகும் குலைகள்

### பறவைகளுக்கு உணவாகின்றன

வடமராட்சி, மார்ச் 24

யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தைச் சந்தைப்படுத்த போதிய வாய்ப்பு இன்மையால் பழுத்த வாழைக்குலைகள் வெட்டப்படாது வாழைமரத்துடனேயே விடப்படுகின்றன.

வலிகாமம் பிரதேசத்தில் பல இடங்களில் உள்ள தோட்டங்களில் வாழைகளில் பழுத்து அழுகிய நிலையில் வாழைக்குலைகள் காணப்படுகின்றன. பறவைகள் பழுத்த வாழைக்குலைகளிலுள்ள பழங்களைத் தமக்கு உணவாகக் கொள்கின்றன.

அச்சுவேலிப் பகுதியில் சனசந்தடி மிக்க வீதி ஓரத்தில் வெவ்வேறு இடங்களில் பழுத்த வாழைக்குலைகள் வெட்டப்படாது கிடக்கின்றன.

குடாநாட்டில் என்றுமில்லாதவாறு வாழைப்பழத்தின் விலை மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. பழுத்த வாழைக்குலைகளை வெட்டிச் சந்தைப்படுத்த எடுத்துச் செல்லும்போது அந்தக் கூலியின் பெறுமதிக்குக் கூட அவற்றை விற்கமுடியாதிருப்பதால் வாழைக்குலைகளை வெட்டாது விவசாயிகள் அப்படியே விட்டுவிடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கதலி வாழைப்பழம் கிலோ இரண்டு ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

(ஐ-173)


## அறுவடைத் தரிசனம் 2000

### தெய்வீக சுகமளிக்கும் சுவிசேஷ எழுப்புதல் கூட்டம்

தேவசெய்தி வழங்குபவர்:

**போதகர் வின்சன் சகாயநாதன்**

ரொறண்டோ அறுவடை மிஷனறி சபை, கனடா

இடம்: துணைவி சிறுவர் விளையாட்டு மைதானம்
(அடைக்கல கூடாரசபை அருகில்)

காலம்: இன்று (24-03-2000) வெள்ளிக்கிழமை

நேரம்: பிற்பகல் 3-00 மணி

யாவும் இலவசம்
இயேசு உங்களை அழைக்கிறார்.

(74663)

# சமாதானம் ஏற்பட்டால் மட்டுமே நிலையான அபிவிருத்தி உருவாகும்

## மட்டக்களப்பில் சுவீடன் தூதர்

மட்டக்களப்பு, மார்ச் 24
தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக மட்டக்களப்பு பிரதேச மக்கள் கஷ்டங்களை அனுபவித்து வருவதைக் காணமுடிகிறது; சமாதான சூழல் ஏற்பட்டால் தான் நிலையான அபிவிருத்தி ஏற்படும். யுத்தப் பிரதேசங்களில் உள்ள சிறார்களின் கல்வி, சுகாதாரம், உரிமைகளைப் பேணுதல் ஆகியவற்றில் சுவீடன் அரச உதவி வருகின்றது.

சுவீடன் நாட்டுத் தூதுவர் பேர்ஜ் மற்சன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர் சுவீடன் அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நடமாடும் நூலகம் மற்றும் வாகனக் கையளிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவருடன் இரண்டாவது செயலாளர் ஸ்ரீனா ஹல்ரனும் வருகை தந்திருந்தார். இவர்கள் மட்டக்களப்பில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து மாவட்ட நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டனர். (ஐ 9-21)

# யாழ். கல்விக் கல்லூரிக்கு தற்காலிக விரிவுரையாளர்

## விரைவில் நியமிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள கல்வியியல் கல்லூரிக்கு தற்காலிக விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியுடையோர் தமது விவரங்களை 'பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை, கோப்பாய்' என்ற முகவரிக்கு இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறு பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

விண்ணப்பம் கோரப்பட்டுள்ள துறைகள் வருமாறு:-

★ உடற்கல்வி
★ விஞ்ஞானம்
★ கணிதம்
★ ஆங்கிலம்
★ நடனம்
★ சங்கீதம்
★ சித்திரம்
★ தொழில்சார்கல்வி

சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய துறைகளுக்கு குறிப்பிட்ட துறையில்பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் ; டிப்ளோமா பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று பீடாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ-10)

### மட்டு. தேர்தல் மோசடிகள்

# பொலிஸ் அதிகாரிகள் மீதான வழக்கு ஜூனுக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 24
ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தின் போது ஏறாவூர், காத்தான்குடிப் பகுதிகளில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக அந்தக் காலப்பகுதியில் மட்டக்களப்பில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் உட்பட 17 பேர் மீது மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை இம் மாதம் 31 ஆம் திகதி வரை நிறுத்தி வைக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் வாக்களிப்பின் போது சுதந்திரமாக வாக்களிக்க முடியாது தடுத்தமை, சதி செய்தமை அல்லது இரண்டிற்கும் உடந்தையாக இருந்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோ உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத்தேர்தல் மோசடிகள்பற்றி விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தம்மீது சுமத்திய குற்றச்சாட்டுகளைத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனக்கோரியிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை உயர்நீதிமன்றில் இருப்பதால் இதனோடு ஒத்த வழக்கை நிறுத்தி வைக்க வேண்டும் என சந்திரா பெர்னான்டோ கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வழக்கு எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ-9-21)

### வீரசிங்கம் மண்டபத்தில்

# மேல்நீதிமன்ற அமர்வுகளை நடத்துவது பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேல் நீதிமன்ற அமர்வுகளை நடத்துவது தொடர்பாகக் கூட்டுறவுச் சபை பிரதிநிதிகளுடன் யாழ். நீதிவான் ஆர். ரி. விக்னராஜா நேற்று முன்தினம் யாழ். நீதிமன்ற அறையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

பிரதம நீதியரசர் மற்றும் நீதியமைச்சின் செயலாளர் ஆகியோர் வீரசிங்கம் மண்டபத்தில் மேல்நீதிமன்ற அமர்வுகளை நடத்துவது தொடர்பாகத் தெரிவித்துள்ள உறுதிமொழிகள் குறித்து இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

மீண்டும் ஒரு கலந்துரையாடல் நடத்தி இது தொடர்பாக முடிவு எடுப்பது என அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-5)

# திருட்டுக்களைத் தடுக்க சில்லாலையில் விழிப்புக் குழு

சண்டிலிப்பாய், மார்ச் 24
சில்லாலைப் பகுதியில் அடிக்கடி நடைபெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களை அடுத்து அங்கு விழிப்புக்குழு அமைக்கப்பட்டு கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலரின் அனுமதியைப் பெற்றுச் செயற்பட்டு வரும் இந்த விழிப்புக் குழுவில் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், விவசாய சம்மேளனம் ஆகிய பொது அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர்.

ஊரடங்குச் சட்ட நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் இவ்விழிப்புக் குழு ஈடுபட்டு வருவதால் திருட்டுச் சம்பவங்கள் ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டிருப்பதாக சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர். (ஐ-135)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 24
சண்டிலிப்பாய் ஆலங்குளாய் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய புனராவர்த்தன பஞ்ச குண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறும்.

மஹாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். (க-15)

★ ★ ★

சுழிபுரம், மார்ச் 24
பண்ணாகம் விசவத்தனை முருகப்பெருமான் ஆலய மணவாளக்கோல வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இன்று சங்காபிஷேகம் மற்றும் ஆராதனைகள் என்பன நடைபெற்று பகல் பன்னிரண்டு மணிக்கு சுவாமி வீதியுலா வருவார். (க-28)

★ ★ ★

கொழும்புத்துறை, மார்ச் 24
அரியாலை பிரப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மணவாளக்கோலம் சகஸ்ர சங்காபிஷேகத்துடன் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

மாலை 4.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையை அடுத்து அம்பாள் பூந்தண்டிகையில் வீதி வலம் வருவார். (க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 24
விஸ்வகுல பிரமாண தவத்திரு நாகலிங்க சுவாமியின் குருபூசை நாளைசனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது சங்கானை நினைவு ஆலயத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் ஆராதனை மற்றும் அன்னதான நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஐ-க)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
நல்லூர் லயன்ஸ் கழகத்தினால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் ஆடியபாதம் வீதியில் உள்ள ஞானியர் மண்டபத்தில் மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் இரத்த அழுத்தம், சலரோகம் ஆகியவற்றுடன் கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும் இடம்பெறவுள்ளன. (ஐ-10)

# வாசகர் திருமுகம்

## பக்ஸ், ஈமெயில், விபரி - 2000

ஆண்டு தோறும் 'ரெலிக்கொம்' தொகுத்து வெளியிடும் தொலைபேசி விபரியில், தங்களது தொலைபேசி எண், பெயர், விலாசம் போன்றவற்றைச் சேர்க்க விரும்பும் தொலைபேசியுடையோர் அது பற்றித் தொலைபேசி விபரிப் பிரிவு அத்தியட்சகருக்குத் தெரிவிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் தொலைபேசி வைத்திருப்போர் இவ்விடயத்தில் அசிரத்தையாக இருப்பதால், யாழ்ப்பாணத்திலுள்ள தொலைபேசி விவரங்கள் சேர்க்கப்படாமலேயே தொலைபேசி விபரி வெளியிடப்படுகிறது.

இப்போது 'பக்ஸ்', 'ஈமெயில்', 'ரெலெக்ஸ்' விபரி—2000 ஆம்ஆண்டுக்கெனத் தயாரிக்கப்படுவதாகவும், அதில் தங்களது பெயர், விலாசம், பக்ஸ், ஈமெயில், ரெலெக்கஸ் இலக்கங்களைச் சேர்க்க விரும்புபவர்கள், 31—03—2000 திகதிக்குமுன் அவற்றை அத்தியட்சகர், தொலைபேசி விபரிப்பிரிவு, ஸ்ரீலங்கா ரெலிக்கொம், 17, ஸ்ரீசுகதோதய மாவத்தை, கொழும்பு—2 என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டுமென 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. தங்கள் விவரங்களைச் சேர்க்க விரும்புபவர்கள் உடனடியாகத் தங்கள் விவரங்களை அனுப்பிப் பயன் பெறுக.

ச. ஆ. கோபாலமூர்த்தி
திருநெல்வேலி.

## 'மோட்டோ றோலா' சேவை சீராகக் கிடைக்குமா?

யாழ். குடாநாட்டில் யாழ். நகரை அண்டிய பகுதிகளுக்கு கேபிள் மூலம் 'ரெலிபோன்' சேவையும் மற்றும் குடாநாட்டில் ஏனைய இடங்களுக்கு அன்ரனா மூலம் மோட்டோ றோலா (Motorola) ரெலிபோன் சேவையும் வழங்கப்படுகிறது. கேபிள் மூலம் நடைபெறும் சேவை திருப்திகரமான முறையில் நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

'அன்ரனா' மூலம் நடைபெறும் மோட்டோ றோலா ரெலிபோன் சேவை படுமோசமான முறையில் இயங்கிக் கொண்டிருப்பதை நாங்கள் எல்லோரும் கண்டும் அனுபவித்தும்கொண்டிருக்கின்றோம்.

ஒரு குறிப்பிட்ட இணைப்புக்களே (Channel) இருப்பதாகவும் அதன் ஊடாகவே சகல மோட்டோ றோலா ரெலிபோன் தொடர்புகளும் வேலை செய்ய வேண்டியிருப்பதால் ஓர் அழைப்பை இங்கிருந்து எடுப்பதற்கோ அல்லது வெளி இடங்களில் இருந்து இங்கு அழைப்புக் கிடைப்பதற்கோ மணித்தியாலக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. இதன் நிமித்தம் ரெலிபோன் இயக்குனரும் பொதுமக்களும் சலிப்படைந்தே போகிறார்கள். அழைப்புக்கள் வரும் எனத்தவமிருந்து பல நாள்கள் அழைப்புக்கள் கிடைக்காமல் மனத் தாக்கத்துடன் வீடு திரும்பும் மக்களின் துயர் சொல்லில் அடங்காது. அழைப்புக்கள் வந்து கதைத்துக்கொண்டிருக்கும் பொழுது தொலைத் தொடர்பு அடிக்கடி துண்டிக்கப்படுவதும் சர்வசாதாரண நிகழ்வாகவே இருக்கிறது. சம்பாஷணை இடை நடுவில் நிறுத்தப்பட்டால் அதன் மனவேதனை எப்படி இருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

யாழ். குடாநாட்டுக்குள்ளேயே ஒரு மோட்டோ றோலா ரெலிபோனிலிருந்து ஏதும் அவசர தேவைக்காக பிறிதொரு மோட்டோ றோலா ரெலிபோனுக்கு அழைப்பு எடுப்பதே முடியாத காரியமாக இருக்கிறது. மணித்தியாலக் கணக்கில் முயற்சித்தும் தப்பித் தவறி எப்போதாவது ஓரிருமுறை லைன்கிடைத்தாலும், நீங்கள் சுழற்றிய இலக்கத்துடன் தற்சமயம் தொடர்பு கொள்ளமுடியாது தாமதித்து சுழற்றவும் என்ற (Racording) சொற்பதமே கேட்பதுண்டு.

ரெலிபோன் சேவையைக் கொடுக்கும் பொழுது அதைச் சீரான முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் வண்ணம் கொடுப்பதுதான் ஒரு நல்ல நிறுவனத்திற்குரிய பண்பான செயல். இணைப்புக்களுக்கு ஏற்ற முறையில் பொதுமக்கள வசதி கருதி யாழ். குடாநாட்டில் பரவலாக — அங்குமிங்குமாக — ரெலிபோன் தொடர்புகளைக் கொடுத்திருக்க வேண்டும். அதைத் தவிர்த்து கைவசம் இருக்கும் இணைப்புக்களுடன் பல இடங்களில், பலருக்கு ரெலிபோன்தொடர்புசேவையை பிரசாரத்திற்கும் பணத்திற்கும் கொடுத்து பெருமைப் பட்டுக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை.

ரெலிபோன் இணைப்புகளை மேலும் மேலும் வழங்கிக்கொண்டே இருக்கிறார்கள். இவற்றுள் ஒன்றாவது நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்காமலிருப்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாததாகும். ரெலிபோன் தொடர்பைக் கொடுத்த ரெலிக்கொம் நிறுவனத்திற்கே மிகப் பெரிய தலைகுனிவாகும்.

இந்த வகையில் பேசும் பொழுது வெளி இடையூறுகள் இல்லாமல் அருகில் இருந்து கதைப்பது போல இருப்பது மெச்சத்தக்க விடயமாகும் என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். ஆகவே இப்படியான நல்ல ரெலிபோன் தொடர்பை சீரான முறையில் இயக்குவதற்கு ஏற்ற வகையில் இணைப்புக்களைப் பெருக்கி மற்றும் இதற்காக வேண்டிய செயற்பாடுகளை ஆவன செய்து பொது மக்களின கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென ரெலிகொம்நிறுவனத்தை மிகவும் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

ச. ஜெய்தாசன், கி. தங்கவடிவேல்
(பாதிக்கப்பட்டோர்)
இருபாலை, கோப்பாய்.

# இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் மாண்புமிகு லின்டா ஜோய் டபீல்ட் அவர்களின் யாழ்ப்பாண விஜயம் குறித்த சிறப்பு மலர் (24.03.2000)

## யாழ்ப்பாண மக்களுக்கு மீண்டும் மின்னொளி தந்த பெருமை பிரிட்டிஷ் அரசுக்கே உரியது



பிரிட்டிஷ் தூதர் மாண்புமிகு லின்டா ஜோய் டபீல்ட்

யாழ் குடாநாட்டில் 96ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் பல்வேறு தேவைகளை மக்கள் எதிர் நோக்கியிருந்தனர். அந்தத் தேவைகளை நிறைவேற்றப் பல மேற்குலக நாடுகள் முன்வந்தன. அவற்றில் சில நாடுகள் அரச சார்பற்ற அமைப்புக்கள் மூலம் நிதி உதவி வழங்கித் தமது பணிகளை முன்னெடுத்தன.

சில நாடுகள் நேரடியாக நிதியுதவிகளை வழங்கித் தமது செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இந்த வகையில் பிரிட்டன் நேரடியாகவும், அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும் பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

பிரிட்டன் பெரிய அளவில் மேற்கொண்ட திட்டம் மின்சார விநியோகத் திட்டமே ஆகும்.

மின்சார விநியோகம் மூலம் மக்களின் பல அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்ற நோக்கத்துடன் 250 கே.வி. வலுவுள்ள ஐந்து மின் பிறப்பாக்கிகளை (ஜெனரேட்டர்களை) முதலில் வழங்கியது. அத்துடன்மின் வயர்கள், மின்மானிகள் எனப் பல மின் உபகரணங்களையும் பிரிட்டன்உதவியாக வழங்கியது.

பத்துக் கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான மின் பிறப்பாக்கிகளையும் மற்றும் உபகரணங்களையும் நேரடியாக மின்சார சபையிடம் பிரிட்டன் ஒப்படைத்தது.

முதலில் ஐந்து மின் பிறப்பாக்கிகளை வழங்கியது. அதன் மூலம் யாழ்ப்பாணம், நல்லூர், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளுக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டது. மண்ணெண்ணெய்க்குப்பி விளக்கு வெளிச்சத்தில் வாழ்ந்து கொண்டிருந்த யாழ். மக்களுக்கு அன்றுதான் நீண்டகாலத்தின் பின்னர் மின்சாரம் கிடைத்தது எனக் கூறலாம்.

காங்கேசன்துறையில் "கூல்எயர்" நிறுவனம் மின்நிலையத்தை அமைக்கும்வரை இந்த மின் பிறப்பாக்கிகள் மூலமே மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

மின் நிலையம் இயங்க ஆரம்பித்ததும் அவை வேறு இடங்களில் பொருத்தப்பட்டன. அத்துடன் அண்மைக் காலத்தில் மேலும் ஐந்து மின் பிறப்பாக்கிகளை பிரிட்டன் வழங்கியுள்ளது.

பிரிட்டன் வழங்கிய மொத்தம் பத்து மின்பிறப்பாக்கிகளில் ஏழு சாவகச்சேரி, புத்தூர்ச்சந்தி, மட்டுவில், கலிகைச்சந்தி, பொலிகண்டி, தொண்டமானாறு, மாதகல் ஆகிய இடங்களில் தற்சமயம் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் 5 ஆயிரத்து 974 குடும்பங்கள்மின்சார வசதி பெற்றுள்ளன.

எஞ்சிய மூன்று மின்பிறப்பாக்கிகளும் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய இடங்களில்பொருத்தப்படவுள்ளன.

பிரிட்டன் வழங்கிய 200 கிலோ மீற்றர் "பண்டிள் கேபிள்" யாழ். நகரிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் பிரிட்டன் வழங்கிய 12 ஆயிரம் மின்மானிகள் தற்சமயம் பொருத்தப்பட்டுவருகின்றன.

குடாநாட்டில் மின்சார விநியோகத்தை விஸ்தரிப்பதற்குரியதொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க பிரிட்டன் இணங்கியுள்ளது. எதிர்காலத்தில் சமச்சீரான மின்விநியோகத்தை மேற்கொள்ள இந்த ஆலோசனைகள் உதவுமென மின்சாரசபை நம்புகின்றது.

மின்விநியோகத்தைச் சீராக்க அளித்த உதவிகளுக்கு மேலதிகமாகவும் பிரிட்டன் பல உதவிகளை வழங்கியுள்ளது.

யாழ். நகரிலுள்ள மணிக்கூண்டுக் கோபுரத்தைப் புனரமைத்து அங்கு மணிக்கூட்டைப் பொருத்தப் பிரிட்டன் உதவ முன்வந்துள்ளது. இதற்காக 10 லட்சம் ரூபாவை வழங்குவதற்கும் பிரிட்டன் இணங்கியுள்ளது. இந்தத்திட்டம்இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. எனினும் இப்போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் தூதுவர் யாழ். மாநகரச்சபைக்கு சென்று இந்த உதவி அடுத்த 4 மாதங்களுக்குள் பூர்த்தியாகும் என்ற செய்தியை யாழ். மக்களுக்கு விடுத்துள்ளார்.

அத்துடன் யாழ். மாநகரசபையின் நூலகத்துக்கு 70 லட்சம் ரூபா செலவில் கணனிகள், புத்தகங்கள் ஆகியவற்றையும் பிரிட்டன் வழங்கியுள்ளது.

மக்களின் பிரதானதேவைகளான கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் ஆகியவற்றை மேம்படுத்தவும் பிரிட்டன் உதவிகளை வழங்கியுள்ளது.

மூளாய் வைத்தியசாலையைப் புனரமைக்க ஒரு கோடியே 69 லட்சத்து ஆறாயிரம் ரூபாவையும், பளை வைத்தியசாலையைப் புனரமைக்க எட்டு லட்சத்து 11 ஆயிரத்து 179 ரூபாவையும், வீட்டு மலசலகூடங் களை அமைக்க 2 லட்சம் ரூபாவையும் சுகாதாரத்துறை மேம்பாட்டுக் காகப் பிரிட்டன் உதவியுள்ளது.

வன்செயல்களால் சேதமடைந்த பாடசாலைகளின் புனரமைப்புக்காக 96 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மூலமாகவும் -

முன்பள்ளிகளுக்கு 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவையும், யாழ். பல்கலைக்கழக மரவேலைத் தொழிலகத்துக்கு ஒரு கோடியே 70 லட்சம ரூபாவையும் அவற்றுக்கு நேரடியாக - வழங்கி கல்வி மேம்பாட்டுக்கு பிரிட்டன் உதவியுள்ளது.

உணவுப் பாதுகாப்புத் திட்டத்துக்காக 36 லட்சம் ரூபாவை கெயர் நிறுவனம் மூலமும், வன்செயலால் கணவர்மாரை இழந்த பெண்களின் விடிவுக்காக 79 ஆயிரம் ரூபாவை நேரடியாகவும் சமூக அபிவிருத்திப் பணிகளுக்கு பிரிட்டன் வழங்கியுள்ளது.

இதுவரை வழங்கிய உதவிகளுடன், மேலும் பல உதவிகளை இவ்வாண்டு பிரிட்டன் வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உதவிகள் கிடைக்க பிரிட்டிஷ் தூதரின் யாழ். விஜயம் உதவும் என்று நம்புவோமாக. *

## குடாநாட்டு மக்களின் முக்கிய தேவைகளை பூர்த்தி செய்ய பிரிட்டன் நிதி உதவி

யாழ்ப்பாணக் குடாநாட்டுப் புனர்நிர்மாணத் திட்டங்களுக்கு பிரிட்டன் சுமார் 2 கோடி 10 லட்சம் பவுண்டுக்கும் (24கோடி 15லட்சம் ரூபா) அதிகமான நிதியை அளித்துள்ளது. வெவ்வேறு துறைசார்ந்த புனர்நிர்மாணத் திட்டங்களை இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லீண்டா டபீல்ட் தமது யாழ்ப்பாண விஜயத்தின்போது பார்வையிட்டார். இத்திட்டங்கள் வலு உற்பத்தி மற்றும் சுகாதாரம், நீர்வழங்கல் துறைகளிலான அபிவிருத்தி சார்ந்தவையாக அமைந்துள்ளன.

### வைத்திய சேவையை சீராக்குவதில் கூடுதல் அக்கறை

1996 ஆம் ஆண்டில், குடாநாட்டின் உடனடி மின் தேவையை எதிர்கொள்ளும் பொருட்டு, பிரிட்டன் எட்டு லட்சம் பவுண்டுகள் (9கோடி 20 லட்சம் ரூபா) பெறுமதியான 200 கிலோவாற் சக்தி கொண்ட எட்டு நகர்த்தும் மின்பிறப்பாக்கிகளையும் அவற்றுக்குரிய இணை உபகரணங்களையும் வழங்கியிருந்தது. 1998 ஆம் ஆண்டில் 11 லட்சம் பவுண்டுகள் (12 கோடி 65 லட்சம் ரூபா) பெறுமதியான மேலும் ஐந்து மின் பிறப்பாக்கிகளையும் இணை உபகரணங்களையும் பிரிட்டன் வழங்கியிருந்தது. இந்த உபகரணங்களின் மூலம் சுமார் 6,500 பாவனையாளர்கள் தமது மின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கின்றது. கப்பூது பகுதியில் புதிய நீர்வழங்கல் திட்டம் ஒன்றிற்கான நிர்மாணப் பணிகளுக்கு நிதி வசதியளிக்கும் பிரிட்டன், கொடிகாமம் பகுதியில் உள்ள முன்னைய திட்டம் ஒன்றின் புனர்நிர்மாணத்துக்கான நிதியையும் வழங்குகின்றது. 78,000 பவுண்டுகள் (சுமார் 90 லட்சம் ரூபா) செலவில் மேற்கொள்ளப்படும் இத்திட்டங்கள் மூலம் இரு கிராமங்களிலும் உள்ள வசதியான இடங்களில் இருந்து சுத்தமான குடிதண்ணீரை 6,500 பாவனையாளர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையை மீள இயங்க வைக்கவும் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, பளை வைத்தியசாலை என்பனவற்றைப் புனரமைப்பதற்கும் பிரிட்டன் நிதியுதவி செய்கிறது. திருத்தப்பணிகள் நிறைவடையும் தறுவாயில் உள்ள மூளாய் வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ்தூதுவர் செல்வி லிண்டா டபீல்ட் விஜயம் செய்து பயன்மிகு வைத்திய உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளார். இவ் வைத்தியசாலை சீராக இயங்கத் தொடங்குவது வலிகாமம் மேற்கு மற்றும் காரைநகர் பிரதேச மக்களின் தேவைகளை நிறைவேற்ற உறுதுணையாக அமையும்.

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் "அல்ற்றா ஸ்கானர்" உட்படப் பரிசோதனை வசதிகளை ஏற்படுத்துவதற்கு பிரிட்டன் நிதியுதவி செய்கிறது. பளை ஆஸ்பத்திரியின் கட்டடங்களை மீளமைப்பதற்கும் நிதியுதவி வழங்கப்படுகின்றது. தென்மராட்சிப் பிரிவின் தென் பகுதி மக்களுக்காக மகப்பேற்று வசதிகளைக் கொண்டமைந்துள்ள ஒரே யொரு வைத்தியசாலை பளை வைத்தியசாலையே என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளுடன் இணைந்து பிரிட்டன் யாழ்ப்பாண வைத்தியசாலையின் குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்புக்கும் நிதியுதவி செய்கின்றது.

பல கல்வி நிலையங்களுக்கும் பிரிட்டன் புனரமைப்புத் திட்டங்களுக்கான நிதியை வழங்கியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மரவேலைப்பட்டறை உபகரணங்களுக்கான நிதியுதவிகளையும் மற்றும் மருத்துவபீடம், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி என்பனவற்றுக்கு நூல்களையும் பிரிட் டன் வழங்கியுள்ளது.

குடாநாட்டிலுள்ள பெரும் எண்ணிக்கையான உள்ளூர் பாடசாலைகளுக்கான காகிதாதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களும் பிரிட்டிஷ் உதவி மூலம பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்பத்தில்ஒருலட்சம ரூபா செலவில் குடாநாட்டு மாணவர்களுக்கு விளையாட்டு மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கிய பிரிட்டன் தற்பொழுது இரண்டு லட்சம் ரூபா செலவில் கல்வி உபகரணங்களை வழங்கவுள்ளது.



**யாழ். இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கூடைப் பந்தாட்ட ஆடுகளத்தை பிரிட்டிஷ் தூதர் லின்டா ஜோய் டபீல்ட் இன்று முற்பகல் 10.00 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கின்றார்.**

**ஆடுகளம் அமைக்கப்பட்ட சமயம் எடுக்கப்பட்ட படம்.**

### யாழ்ப்பாணத்தில் நான்கு நாள்கள்...

**யாழ்ப்பாணத்துக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு வந்த பிரிட்டிஷ் தூதுவர் லின்டா ஜோய் டபீல்ட் இன்று கொழும்பு திரும்புகின்றார்.**

**அவர் இங்கு பங்குபற்றிய நிகழ்ச்சிகளில் சில வருமாறு:-**

*** செவ்வாய்க்கிழமை - யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள், துறைகளின் தலைவர்கள், மாணவர் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்தார்.**

*** புதன்கிழமை - யாழ். செயலகத்தில் அரச திணைக்கள தலைவர்களைச் சந்தித்தார். தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ். நிலைமை குறித்துக் கேட்டறிந்தார் யாழ். மாநகர சபைக்கு சென்று அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடி மாநகர சபைத் தேவைகளைக் கேட்டறிந்தார்.**

*** வியாழக்கிழமை - யாழ். ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்டுவரும் ஐந்து மாடிக் கட்டடங்களில் பூர்த்தியான 2ஆவது மாடியை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.**

# பேச்சு ஆரம்பிக்கப்பட்டதும்....

தமிழ் மக்கள் மீது ஒரு கூட்டுத் தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கும் இந்த ஒடுக்குமுறைகளும் நெருக்குதல்களும் உடன் நீக்கப்பட வேண்டும். தமிழ் மக்களும் அதனையே விரும்புகின்றார்கள். பொதிகளிலும் பெட்டகங்களிலும் ஒப்பந்தங்களிலும் அரசமைப்புச் சட்ட திருத்தங்களிலும் தமிழர்களுக்கு பெரிதாக அக்கறை இல்லை. இந்தச் சட்டங்கள் அரசமைப்பின் கட்டுக்கோப்பை மாற்றியமைக்குமே தவிர தமிழரின் நாளாந்த வாழ்க்கையின் கொடூரமான யதார்த்தத்தை பிரதிபலிக்கவில்லை.

எமது மக்கள் தமக்கு உரித்தான உரிமைகளோடும் சுதந்திரங்களோடும் கௌரவமாக சாதாரண மனிதப் பிறவிகளாக வாழ விரும்புகின்றார்கள். அவர்கள் தமது சொந்த வீடுகளில் சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புகின்றார்கள். தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாட விரும்புகிறார்கள். தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்தும் சொந்தக் கடல்களில் மீன்பிடித்தும் பயமின்றி தடைகளின்றி நெருக்குவாரங்களின்றி கௌரவமாக உழைத்து வாழ விரும்புகின்றார்கள்.

தமிழர்கள் மீது இறுக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறை சூழ்நிலையை நீக்கி சமாதானத்துக்கும் பரஸ்பர நல்லெண்ணத்துக்குமான ஒரு இயல்பு நிலையை தோற்றுவிக்க அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்று சேர்ந்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஒடுக்குமுறையான தடைகள் நீக்கப்படுவது அரசாங்கத்தின் போர் கொள்கையோடு பின்னிப்பட்டிருப்பதால் ஒரு உருப்படியான போர் நிறுத்தத்துக்கும் விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர்.

தொடரும் போர்ச் சூழலில் சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதை புலிகள் விரும்பவில்லை. ஒருபுறம் போரை நடத்திக்கொண்டு மறுபுறம் பேச்சை நடத்துவதும் ஒருவரை ஒருவர் கொன்று அழித்துக் கொண்டு சமாதானம் பேசுவதும் மிகவும் அபத்தமான முட்டாள் தனமான காரியம். அதனால்தான் சவமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னராக போர்ச் சூழலை நீக்கிவிட வேண்டும் என நாம் வற்புறுத்துகின்றோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னராக வடக்கு - கிழக்கில் இருந்து சிங்கள ஆயுதப் படைகள் விலக்கப்படவேண்டும் என்பதை பேச்சு வார்த்தைக்கு ஒரு நிபந்தனையாக நாம் வலியுறுத்தவில்லை. ஆனால் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு போர் மீறல்களை மேற்பார்வை செய்ய ஓர் கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டதன் பின்னர் படைகள் முகாம்களுக்குள் அனுப்பப்படவேண்டும். ஒரு இறுதித் தீர்வு காணும்வரை அரசாங்கம் தனது படைகளை தமிழ் மண்ணில் வைத்திருப்பதை நாம் எதிர்க்கவில்லை.

ஆனால் போர் நிறுத்தத்தின் பின்னர் மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து, பாடசாலைகளில் இருந்து, கல்லூரிகளில் இருந்து கோயில்கள் புனித தலங்களில் இருந்து பொது நிலைகளில் இருந்து வீதிகளின் முடுக்கு மூலைகளில் இருந்து பட்டினம் நகரப் புறங்களில் இருந்து ஆயுதம் தரித்த படைகள் விலக்கப்பட்டு முகாம்களுக்குள் நிறுத்தப்படவேண்டும்.

போர் நிறுத்தத்தின் பின்னர் சிங்களப் படைகள் குடியிருப்புப் பிரதேசங்களை ஆக்கிரமித்து நிற்பதை நாம் விரும்பவில்லை. இந்த ஆக்கிரமிப்பு நிலை தொடர்ந்தால் எமது பட்டினங்களும் குடியிருப்புக்களும் தொடர்ந்தும் திறந்த வெளிச் சிறைச் சாலைகளாக இருக்கவேண்டியிருக்கும்.

தமிழரின் சமுக வாழ்விலும் பீதியும் பதற்ற நிலையும் தொடரும். போர் நிறுத்தம் அர்த்தமற்றதாகிவிடும். ஆக்கிரமிப்பு நெருக்கடி தொடரும். அதனால்தான் போர் நிறுத்தத்தின் பின்னர் சிங்கள ஆயுதப் படைகள் முகாம்களுக்குள் அனுப்பப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

நெருக்கடியைத் தணித்து இயல்பு நிலையை ஏற்படுத்தும் எமது இந்த யோசனையை ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் சமாதானத்தை உருவாக்குவதில் சந்திரிகா அரசு உண்மையான அக்கறை கொண்டிருந்தால் எமது யோசனையை கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களை அடிபணிய வைத்து புலிகளை பேச்சுக்கு நிர்ப்பந்திக்கும் நோக்குடனேயே சிங்கள அரசாங்கம் இராணுவ அடக்கு முறையையும் பொருளாதார ஒடுக்குமுறையையும் எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இந்தக் கொள்கை அடிப்படையிலேயே தவறானது. இது சமாதானப் பாதைக்கு இட்டுச் செல்லப் போவதில்லை.

வன்னியிலும் ஆனையிறவுப் பிரதேசத்திலும் எதிர்கொண்ட பாரிய இராணுவத் தோல்விகளும், வருடங்களாக இரத்தம் சிந்திப் போராடி ஆக்கிரமித்த பெரும் நிலப்பரப்புகளை இழக்க நேர்ந்ததும் இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியாது என்ற உண்மையை சந்திரிகாவுக்கு உணர்த்தியிருக்கலாம். அத்தோடு தமிழர் தாயகத்தை படையெடுத்து நிகழ்த்திய அனர்த்தங்களால் தமிழ் மக்களின் வெறுப்புக்கும் சந்திரிகா ஆளாகியிருக்கின்றார். அத்தோடு ஸ்ரீலங்காவின் ஆயுதப் படையினரும் சிக்கலான பிரச்சினைகளை எதிர்கொண்டு நிற்கின்றனர்.

20 வருடங்களுக்கு மேலாக முடிவின்றித் தொடரும் போரில் பங்குபற்றி மாறிமாறி தொடர்ச்சியாக நிகழ்ந்த சமர்களிலும் சண்டைகளிலும் இழப்புக்களைச் சந்தித்து சோர்ந்து களைத்து ஆட்டம் கண்டு நிற்கும் சிங்கள இராணுவத்தின் தாக்குதல் வலு பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் ஆள் பலமும் குறைந்து மனோபலமும் உடைந்து நிற்கின்றனர். பொறுப்பற்ற அரசியல்வாதிகளின் ஆதிக்கக் கனவை நிறைவுபடுத்துவது என்பது இந்த வலுக்குன்றிய இராணுவத்தால் இனி முடியாத காரியம். இந்த யதார்த்தைத்தான் சந்திரிகா இப்பொழுது சந்தித்து நிற்கின்றார். இதன் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா இராணுவப் பாதையைக் கைவிட்டு சமாதான வழியில் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிப்பார் எனக் கருத முடியாது. அவருக்கு இப்போது தேவைப்படுவது காலம். இராணுவ இயந்திரத்தை மீளமைப்புச் செய்து நவீனமயப்படுத்தி இன்னுமொரு பெரும் போருக்கு தயார் செய்வதற்கு சந்திரிகாவுக்கு காலம் தேவைப்படுகின்றது. அவர் ஏற்கனவே இராணுவச் செலவீனத்துக்கு வரவு-செலவுத் திட்டத்தில் பெருந்தொகையான நிதியை ஒதுக்கியிருக்கின்றார். அத்தோடு அதிநவீன தொழில்நுட்பம் வாய்ந்த அழிவு ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகின்றார். அவரது தளபதிகளும் தென்னிலங்கையில் வீடு வீடாகச் சென்று படைக்கு ஆள் திரட்டி வருகின்றார்கள். ஆகவே தற்போது கொழும்பில் அரங்கேறியுள்ள சமாதான நாடகமும் பேச்சுவார்த்தைக்கு புலிகளுக்கு விடுக்கப்படும் அழைப்புகளும் ஒரு அரசியல் ஏமாற்றுவித்தை என்றே நாம் கருத வேண்டியிருக்கின்றது. இராணுவத்தை நவீனமயப்படுத்த தேவையான கால இடைவெளியை நிரப்ப நடைபெறும் ஒரு அரசியல் கூத்தாக இருக்கலாம்.

ஆசியாவிலேயே மிகவும் கடினமானதும் சிக்கலானதுமான தமிழரின் தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கு குறுகிய கால வரம்புகளை நிர்ணயிக்க முடியாது. தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆழத்தையும் அகலத்தையும் சிக்கலான வரலாற்றையும் மட்டுமன்றி இந்த போராட்டத்தை முன்னெடுத்து வரும் சுதந்திர இயக்கத்தின் இலட்சியப்பற்றையும் சந்திரிகா நன்கு புரிந்துகொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் எந்தவித காலக்கெடுக்களையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. காலக்கெடுக்களை நிர்ணயிப்பதே ஒரு நிபந்தனையை விதிப்பதாக முடியும். இந்த கால வரம்புக்குள் விடுதலைப் புலிகளையும் உட்படுத்தலாம் என சந்திரிகா கருதுவாரானால் அவருக்கு ஏமாற்றமே காத்துநிற்கும். ஏனென்றால் நாம் அவரது கால அட்டவணை திட்டத்துக்குள் மாட்டிக்கொள்ளப் போவதில்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னராக தனது அரசமைப்புத் திருத்தங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் சந்திரிகாவுக்கு இருக்கலாம். நாடாளுமன்ற ஆசனங்களில் அமர்ந்திருப்பவர்களுக்கும் அந்த நிர்ப்பந்தம் இருக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் ஒரு விடுதலை இயக்கம். சந்திகாவின் கால வரம்புக்குள் செயற்படவேண்டும் என்ற அரசியல் நிர்ப்பந்தங்கள் எதுவும் எமக்கு இல்லை.

தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முட்டுக்கட்டைகளாக நின்று பிரச்சினை இழுபடுவதற்கும் தீவிரமடைந்திருப்பதற்கும் காரணமான வரலாற்று குற்றவாளிகளான சந்திரிகா அரசும் ஐ.தே.கவும் ஒன்று கூடி கதைப்பது ஆக்கபூர்வமான விடயம். தமிழரைப் பொறுத்தவரை தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகள் ஒன்று கூடி கலந்தாலோசிப்பது முக்கியமல்ல. இந்த சர்வ கட்சி கூட்டு முயற்சிகளும் இணக்கப்பாடுகளும் திம்புக் கோட்பாடுகளாக பிரகடனப்படுத்தப்பட்ட தமிழரின் தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யும் ஒரு தீர்வுத்திட்டத்தை உருவாக்குமா என்பதுதான் முக்கியம்.

சந்திரிகாவின் கட்சியும் ஐ.தே.கட்சியும் சாராம்சத்தில் சிங்களப் பேரினவாதக் கட்சிகள். இக்கட்சிகளது அரசியல் நலன்கள் சிங்களத் தொகுதிகளில் வேரூன்றிக் கிடக்கின்றன. இவ்விரு கட்சிகளுமாக இணைந்து பெரும்பான்மை சிங்களவரின் நலன்களைப் பேணும் வகையில் தமிழருக்கான அரசியல் அதிகாரத்தை மேலும் வெட்டிக் குறைத்து தமிழரின் தாயகத்தை துண்டாடி ஒரு இறுக்கமான ஒற்றையாட்சியை உருவாக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்படியான ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கப்படுமானால் சிங்களக் கட்சிகள் ஒன்றுபட்டதில் தமிழர்களுக்கு எவ்வித பலனும் ஏற்படப் போவதில்லை.

தமிழரின் பிரச்சினையைத் தீர்க்க சிங்கள ஆட்சிப் பீடங்கள் முயற்சிகள் எடுக்கும் பொழுது பௌத்த மகாசங்கத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்புவது சிங்கள அரசியல் வரலாற்றில் ஒரு விபரீதமான ஒரு புதிய நிகழ்வு அல்ல. பௌத்த குருமாரின் எதிர்ப்பால் ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் கிழித்தெறியப்பட்ட வரலாற்றை எமது மக்கள் நன்கு அறிவர். இப்படி பாலசிங்கம் தெரிவித்தார். (இ-3)

## சான்றிதழ்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

றோர் ஜெப பங்காளர்கள் அனைவரையும்வருமாறு கோரப்பட்டுள்ளது.

கிறிஸ்துவுக்காக இளைஞர், வாலிபர் மத்தியில் சேவையாற்றும் ஒரு ஸ்தாபனம் ஆகும். அது சபை என்று ஏற்கனவே பிரசுரமாகியது தவறு என சுட்டிக்காட்டப்பட்டது.


யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் வளர்ச்சி நிதிக்காக

திரு. தே.தேவானந்த் இன் தயாரிப்பு நெறியாள்கையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பெருமையுடன் வழங்கும்

"அக்கினிப் பெருமூச்சு"

'உறவுகளைத் தொலைத்து
உள்ளத்தில் நெருப்பைத்
தாங்கி நிற்கும் உறவுகள்
பற்றிச் சிந்திக்க ஒரு தடவை
அரங்குக்கு வாருங்கள்'

இடம் : மானிப்பாய் மகளிர் கல்லூரி.
காலம் : 25.03.2000
நேரம் : மாலை 3.00 (புதிய நேரம்)
அன்பளிப்பு : 50/-, 30/-, 20/-

விளம்பர அன்பளிப்பு:
மாருதி ரெக்ஸ்ரைல்ஸ்,
இல.1, பெரியகடை, யாழ்ப்பாணம். (C/11516)



We Cordially invite
Our Patrons, Friends, Well-Wishers and Students to join us in our 4th Institute Day Celebrations at 9.15 a.m. on Saturday, 25th March 2000
at:
JUBILEE HALL
St. John's College, Jaffna.

Chief Guest:
Mr. M. Nadarajasundaram
(Dean, Faculty of Management Studies and Commerce, University of Jaffna)
&
Mrs. M. Nadarajasundaram

Guest of Honour:
Mr. R. J. Vigna Raja
(District Judge, Jaffna)

Director, Staff,
IIS, Jaffna.
(C/11518)



எமது ஓடியோ C.D வெளியீடு
இசைப்புயல் A.R.ரகுமானின்
* கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்
* மௌனத்தில் பேசாதே
விலை 600/=
மெலோடியஸ் மியூசிக்
இல. 303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/11517)



ராஜா
யாழ்ப்பாணம்
3ஆவது வாரமாக
ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த
படையப்பா
காட்சிகள் 10.30, 2.30
(C/11349)



நாகம்ஸ்
சுன்னாகம்
ரசிகர்களே
ரம்யாகிருஷ்ணன், சௌந்தர்யா நடித்த
அம்மன்
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
மனிதர்களை பேய்களுக்காக கொலை செய்யும் சம்பவங்கள் நிறைந்த காட்சி
(74710)



லிபேட்டி
அச்சுவேலி
ரசிகர்களே!
நாளை மட்டும்
பார்த்திபன், ரீதா, வடிவேல் நடிப்பில்
காக்கைச் சிறகினிலே
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P :- 070-212223
070-212678
Fax No:- 0094 - 70212223
(74706)



A/L 2001
இணைந்த கணிதம்
(நிகழ்தகவு)
By: N.A. சயனன்
மார்ச் 27இல் ஆரம்பம்
30 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
31ஆம் திகதிக்குப் பின் அனுமதி வழங்கப்படமாட்டாது.
– அதிபர்
(74711)


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் நடராஜா

(முன்னாள் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி - யாழ்ப்பாணம், கொழும்பு)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நடராஜா நேற்றுமுன்தினம் (22.03.2000) புதன் கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் Dr. மகேஸ்வரியின் அன்புக் கணவரும், Dr. மகேந்திரன் (லண்டன்), Dr. வினோதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவலிங்கத்தின் (கனடா) சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் நாளை (25.03.2000) சனிக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.திலகராஜா
(தம்பி)

கட்டுப்பிலானை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(74768)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.